பொங்கல் மலர்

ஜப்பான் வாழ் தமிழ் மக்களின் பொங்கல் விழா

2024



THE SOLUTION

sovablu

AI-Driven No-Code DX Platform

aws PARTNER

aws Qualified Software

powered by aws



www.sovablu.com

தலையங்கம்

வணக்கம். இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

தமிழர் திருநாளுக்கு வயது இரண்டாயிரத்துக்கும் அதிகமாக இருக்கலாம். சங்க இலக்கியத்தில் பொங்கல் பற்றியும் தைத்திருநாள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. கதிரவனுக்கு நன்றி சொல்லும் அறுவடைத் திருநாட்கள் அனைத்து நாகரிகங்களிலும் காணப்படுகிறது. இயற்கையோடு இயைந்து வாழும் ஜப்பானியர்கள் பழைய குப்பைகளைக் கொளுத்தும் தொந்தோயாக்கி(どんど焼き) என்ற பெயரில் போகியையும் கொஷோகாத்சு (小正月) என்று பொங்கலையும் கொண்டாடி வருகிறார்கள். தோக்கியோ வாழ் தமிழர்களாகிய நாம் முப்பது வருடங்களுக்கு மேலாக ஒரு பெருமிதத்துடனும் மகிழ்ச்சியுடனும் பொங்கல் விழாவை கொண்டாடி வருகிறோம். ஜப்பானில் வளர்கிற நமது அடுத்த தலைமுறையினருக்கும் இந்தப் பாரம்பர்யத்தை முழுவதுமாக கொண்டு செல்வோம்.

நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு பொங்கல் மலர் வெளியாகிறது. ரேய்வா என்று பெயரிடப்பட்ட புதுயுகம் துவங்கிய ஒரு வருடத்திலேயே கொரொனா பெருந்தொற்று உலகை இரண்டாண்டுகளுக்கும் மேலாக கட்டிப்போட்டு விட்டது. மகுட வடிவில் இருப்பதால் லத்தீன் மொழியில் மகுடம் என்று பொருள் தரும் கொரொனா என்கிற தீநுண்மி தான் கடந்த நான்காண்டுகளின் உலகத்தின் தலையாய பிரச்சனையாக இருந்து வந்தது. உலகெங்கிலும் எழுபது லட்சம் மனித உயிர்களைக்காவு கொண்ட கிருமி மருத்துவ விற்பன்னர்கள் அதிவிரைவாக கண்டுபிடித்த தடுப்பூசியின் மூலமாக பெருமளவுக்கு மட்டுக்கு கொண்டுவரப்பட்டது. இன்றும் *JN-1* போன்ற புதிய திரிபுருக்கள் மக்களை அச்சுறுத்திய வண்ணம் உள்ளன.

பெருந்தொற்றின் தீவிரம் குறைந்ததும் போர்கள் தலை தூக்கத் துவங்கின. நாடுகளுக்கிடையிலான எல்லாப்போர்களுமே ஒருவிதத்தில் வரப்புத்தகராறுகள் தான். உக்ரேன் நிலத்தை அபகரிக்க நினைக்கும் ரஷியாவின் ஆக்கிரமிப்பு இரண்டாண்டுகளாக உக்கிரமாக நடைபெறுகிறது. ஹமாஸ்சின் குரூரத் தாக்குதல் காரணமாக மீண்டும் மூண்டெழுந்த இஸ்ரேல்-பாலஸ்தீன போர் காசா மக்களை சொல்லொணா துயரத்தில் மூழ்கடித்துள்ளது. உலகம் வெப்பமயமாதல் காரணமாக இயற்கைப்பேரிடர்களின் எண்ணிக்கையும் ஏற்படுத்தும் சேதமும் ஏறிக்கொண்டே போகிறது. கடந்த டிசம்பர் மாதத்தில் தமிழகத்தின் தென்மாவட்டங்களில் வாழ்நாளில் கண்டிராத அளவு ஏற்பட்ட மேகப்பொழிவும் வெள்ளமும் மக்களை நிலைகுலைய வைத்துள்ளன.

இத்தனை இடர்களுக்கு நடுவிலும் நம்பிக்கையோடு வாழ்வது எப்படி? நல்ல செய்திகளையே கேட்க முடிவதில்லையே என்கிற உங்கள் ஆதங்கம் புரிகிறது. ஆனால் மனித குலம் முன்னெப்போதையும் விட முன்னேறிக்கொண்டுதான் இருக்கிறது. இந்த ஆண்டில் அறுபதுக்கும் அதிகமான நாடுகளில் அதிபருக்கான அல்லது நாடாளுமன்றத்திற்கான தேர்தல் நடைபெறப்போகிறது. ஆட்சிமாற்றத்தை போர்களும் படுகொலைகளும் தீர்மானித்த காலம் மாறி வாக்குச்சீட்டுகள் தீர்மானிக்கும் மக்களாட்சி முறை உலகின் பல நாடுகளிலும் நிலைபெற்று நிற்பது நிச்சயமாக மனிதகுல முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது. மக்களாட்சியில் பல குறைகள் இருப்பினும் அவற்றின் தீர்வாக மேலும் மக்களாட்சியை வலுப்படுத்த வேண்டியதே அவசியமாகிறது. இந்த ஆண்டில் வாக்குச்சீட்டுகளின் தங்கள் முத்திரையைப் பதிக்கப்போகும் அறுநூறு கோடி மக்களும் பெருமிதத்துடனும் பொறுப்புணர்வுடனும் மக்களாட்சியைக் காப்பாற்ற வேண்டிய தருணம் இது.

வழமை போலவே இந்த இதழும் உங்கள் படைப்புத்திறனை பறை சாற்றும் விதமாக பற்பல படைப்புகளைத் தாங்கிவருகிறது. தோக்கியோ வாழ் தமிழர்களுடன் அமீரகத்து தமிழ் சங்க நண்பர்களும் தங்கள் படைப்புகளை அனுப்பிவைத்தது எங்களை மேலும் உற்சாகப்படுத்துகிறது. சசிகுமார், மகாதேவன் உட்பட பொங்கல் மலரின் பத்தொன்பதாவது இதழுக்குப் பங்களித்து உதவிய அனைவருக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தைப்பொங்கல்... நடைமுறையும்,

தைத்திருநாள்

தமிழை, தமிழுணர்வை, மாண்பை, மனதை, கால்நடையை, கரும்பை,
பெரியோர் அன்பை.... ஒருங்கே இணைத்து “தைத்த திருநாள்”
இயற்கை போற்ற “வைத்த திருநாள்”.--இந்த தைத்திருநாள்
பழையன கழித்தல்
புதியன ஏற்று பகலவன் தொழுதல்
மாடெனும் செல்வத்தை மக்களும் மதித்தல்
பெரியோர் வணங்கி பேரன்பு வளர்த்தல்
வருடத்தின் வாசலில் நான்கு நாட்கள்

தாழ்வாரத்தில் அடுப்புக்கூட்டி,
காய்கறி பழங்கள் கரும்பு ... சூழ
வண்ணக்கோலமிட்டு, வாயெல்லாம் புன்னகைத்து
இருபானைக்கும் மஞ்சள் இஞ்சி ஆடை கட்டி
நற் கதிரவன் கண்விழிக்கும் வேளையில்
நெற் கதிர் தந்தமைக்கு நன்றி சொல்லி,
புத்தாடை, புத்தரிசி... பொங்கலோபொங்கல்
குலவையெல்லாம் ...
பழங்கனவாய்... பகல் நிலவாய் ...
குக்கருக்கு குங்குமம் வைத்து
விசிலையே குலவையாக்கி,
மெகா மார்ட் பச்சரிசி பாலில் கொதிக்க
சர்க்கரைப்பொங்கல் சட்டென தயாராகி...

சகலமும் தொலைத்த பின்னே...
தோட்டத்து பசுமையெல்லாம்
தொட்டியில் தான் தேடுகின்றோம்
பொங்கல் விருந்து வைத்து விளம்பிய பின்னர்,
கூட்டிக் கழித்து, பெருக்கி வகுத்துப் பார்க்க
விடுமுறை மட்டும் தான் மீதம்...
“வியர்வைக்கு விடுமுறை” நான் கொண்ட போதம்.
வியர்வை என்பது உடல் உகுக்கும் ஆனந்தக் கண்ணீர்.
உழைப்பவன் உடலின் ஒவ்வொரு செல்லிலும் மலரும் பூ.
களைப்பின் புன்னகை..கண்சிமிட்டும் உழைப்பு...
அதுவே இந்தக் கவிதையின் தலைப்பு.

விடுமுறை என்பது நமக்கான தருணம்
மாதங்களில் அழகு மார்கழி. மார்கழியின் வியர்வை குளிர்பனி.
அந்தக் குளிர்பனி விடுமுறை பெறும் தைமாதத்தில்
அதை வழியனுப்பும் மார்கழி வாசல் விழாக் கோலத்தில்.
ஆண்டெல்லாம் நிலத்தில் உழைக்கும் காளைக்கும்,
களத்தில் களைப்பெய்தும் விவசாயியின் வேலைக்கும்... என்ற காரணம் சொல்லி,
வாகன நெரிசலற்ற சாலைக்கும்,
பசுவுக்கும், கன்றுக்கும்...பள்ளிக்கும், கல்லூரிக்கும்...
இயற்கை விளைவித்த அனைத்துக்கும்,
அத்தனைக்கும் விலைவைத்த அரசுக்கும்,
ஆள்வோர்க்கும், அலுவலுக்கும், நாலு நாட்கள்...
“அப்பப்பா” களைப்பை நீக்க, வியர்வை போக்க, விடுமுறை.

*சசி குமார் கடலூரில் வளர்ந்த நெல்லைக்காரர். இருபதாண்டுகளுக்கும் மேலாக அமீரகத்தில் வசிக்கிறார். அருமை மனைவி மீனா, அருந்தவப்புதல்வன் அரவிந்த் பாரதியுடன் பொன்மாலைப் பொழுது மற்றும் தோக்கியோ தமிழ்ச் சங்கத்தின் இலக்கியத் தூணாக விளங்குபவர்.. **மெல்லச்சிறகசைத்து.. (பயண நூல்), எழினி (குறுநாடகத் தொகுப்பு)** என்கிற இரு நூல்களின் ஆசிரியர். துபாய் மின்சாரம் மற்றும் நீர் ஆணையத்தில் (DEWA), முதுநிலைப் பொறியாளராக, திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு பணி.*

நான்குநாள் விடுமுறையும்

சசி S குமார்

சாய்வு நாற்காலியில், ஒய்வாய் அமர்ந்து...
உலகத்தொலைக்காட்சிகளில் முதல் முறையை...
நூறாம் முறையாய்க் காண நீள் விடுமுறை.
அமேஸான், நெட்ஃப்ளிக்ஸ் கடந்து அரங்கம் காணும் விடுமுறை.
அரங்கங்கள் யாவிலும் நூறு? ஐம்பது? விழுக்காடு...
அத்தியாவஸ்யம் யாவையும் இன்னும் வழக்கோடு...
அதற்கென்ன? அனைத்தும் மறந்து இணைந்து உறவாடு...
நாளெல்லாம் இருளரங்க ஒளியில் நீ நாட்டுக்கொரு தலைமைத்தேடு...
நட்சத்திரங்கள் நலிந்து, தள்ளாமையால் விடுமுறை கேட்டால்,
தமிழா ...நீ தளர்ந்து வாடு...

"வியர்வைக்கு விடுமுறை" என்னும் விதிமுறை...
வீதி தோறும் விலக்குப் பெறுகிறது
பேராயங்கள் கூடி விற்கும் சாராயச் சந்தைகளில்,
விடுமுறைக்கே விடுமுறை. சரித்திர விற்பனை சாதனைகள்
நாளேடுகளில்... விடுமுறை நாள் விற்பனை அமோகம்.
-தலைப்புச் செய்தியாக-

அத்தனைக்கும் அனைத்துக்கும் விடுமுறை...
இல்லத்தின் உள்ளே இல்லாத விடுமுறை...
வாசற்கோலமும், கரும்புக்கட்டும், மஞ்சள் கொத்தும்,
பொங்கற் பானையும், காய்கறிக் குவியலும், சர்க்கரைப் பொங்கலும்,
பிள்ளைகள் சலசலப்பும், கணவனின் அழைப்பொலியும்...
அத்தனைக்கு இடையினிலும் மாறாத புன்னகையும்,
கூந்தலில் ஆடுகின்ற மல்லிகையும்,
பருத்திப் புடவை கட்டி, பளப்பளக்கும் உன்முகத்தில் "அம்மம்மா"
மின்னுகின்ற வியர்வைக்கு ஏதம்மா விடுமுறை?

விடுமுறை என்பது...
விடியல் -நிலவின் விடுமுறை
அந்தி -ஆதவனின் விடுமுறை
முகிழ்ச்சி - விதைக்கு விடுமுறை
நெகிழ்ச்சி- கண்டிப்பிற்கு விடுமுறை
மகிழ்ச்சி- கவலைக்கு விடுமுறை
மௌனம்- வார்த்தைக்கு விடுமுறை
கண்ணீர்- வாய்ச்சிரிப்புக்கு விடுமுறை
கலைகள்- காழ்ப்புக்கு விடுமுறை
சிலைகள்- கல்லுக்கு விடுமுறை
நெருப்பு- ஈரத்தின் விடுமுறை
பிறப்பு -தாய் வயிற்றுக்கு விடுமுறை
இறப்பு - தனது வாழ்க்கைக்கே விடுமுறை

பொங்கலோ, திங்களோ,
பூமியின் சுழற்சிக்கும், பூக்களின் மலர்ச்சிக்கும்,
சுவாசத்துக்கும்,நேசத்துக்கும்,
காற்றுக்கும், கடலலைக்கும், கற்பதற்கும்,கவிதைக்கும்
வாய்மைக்கும்,தாய்மைக்கும் ...
விடுமுறை ஏதும் உண்டா?
விடை ஏது கூறு நண்பா!

அடுக்ககத்தின் முன்றிலும், அதில் அமரும் அன்றிலும்...

சசி S குமார்

"கட்டைச் கைச்சுவர் சாய்ந்து நிற்கலாம்,
வீதி சுவாரஸ்யம் விழியெறிந்து பற்றலாம்,
தொட்டிச் செடிகள் நனைய நீரூற்றி,
பூக்கள் எண்ணி புன்னகை சிந்தலாம்...
மெல்ல அருகமரும் புறாச் சிறகின்
மென்மை உணர அனுமதி முயலலாம்...
தென்றல், தேநீர் இரண்டும் சுகித்து
மாலைநேரப் பண்பலை ரசிக்கலாம்...
சாய்வு நாற்காலி சவுகரியம் சேர்க்க,
உறவு, நட்பிடம், நடப்பைப் பேசலாம்...
வீதியில் சிந்தும் சித்திரை வெய்யிலையும்,
விடியலில் குளிரும் மார்கழிப் பனியையும்
கொஞ்சம், கொஞ்சி, வீட்டினுள் அழைக்கலாம்,
இரவுநேர வானின் இருளை,
நமக்கே நமக்கென உரிமை கொள்ளலாம்.
நகரும் நிலவில் மேனி நனைத்து
காதல் பேசி... கண்கள் துவளலாம்...
கோரைப்பாய்த் தடம் முதுகில் பதிய
நன்கு உறங்கி, நள்ளிரவு விழிக்கலாம்...."
------ என பழகுதமிழ் வழக்கிலிருக்கும்
பால்கனி என்ற முன்றில் குறித்த கனவுகள்.

வீடுபேறு அடைந்தும்,
பால்கனிப்பேறு பல்லாண்டுகள் இல்லை
துணையின், மகனின், மனத்தின் கனவு,
அடுக்கக மூன்றாம்தளம்... முன்றில்
வாய்த்து,
மூன்று மாதங்கள் இன்றோடு.
ப்ளாஸ்டிக் பைகள், பழைய காலணி,
உடைந்து போன உடற்பயில் இயந்திரம்,
ஆணி, கயிறு, அட்டைபெட்டிகள்....
ஆடை உலர்த்தும் சட்டகம் என,
அழுக்கு, அடைசல் பால்கனி நிறைய...
இறகு, கழிவு, எச்சம் தவிர்க்க
பறவை வரவைத் தடுக்க...
கவனம் மிகவே, கம்பி வலை.
பழங்கனவின் குப்பைகளுடன்
பறவைகளற்ற பால்கனி இன்று...
அழுக்கில், தூசியில், நின்றவாறே
அழகுப் பறவைகளின் வண்ணம் ரசிக்க,
தூரச் சிறகசைப்பில் மனசு மகிழ்த்த
தொலை குரல் ஒலியில் அன்பை உணர
பழக்கிக் கொண்டோம்... அது சரி.
உறவுகளும், பறவைகளும்... வேறா என்ன?

மேலே உள்ள கவிதையையே தூண்டி(Prompt) யாக உள்ளிட்டு chatGPTயில் உருவாக்கிய ஓவியம்

ஓவியம்: ChatGPT

Ambika
BRINGING INDIA CLOSER
WISHES YOU ALL
A PONGAL FILLED WITH
THE AROMA OF SUCCESS.
HAPPY
Pongal
300+
PRODUCTS
SELECT
BASMATI RICE
バスマティライス
ラスグッラ
RASGULLA
PREMIUM ASSAM TEA
ORGANIC WHEAT FLOUR
TURMERIC POWDER
ターメリックパウダー
PLAIN KHARI
25
YEARS
SINCE
1998
IN JAPAN
Marketed in Japan by
Ambika
Corporation
www.ambikajapan.com

Unraveling the Quantum

Bridging the Gap between Analog and Digital Frontiers

In the vast landscape of computing, the emergence of quantum computing stands as a beacon of revolutionary change. To comprehend the monumental leap that quantum computing represents, it's pivotal to understand its roots and how it diverges from the traditional analog and digital computational paradigms.

The Evolutionary Journey: Analog to Digital

Historically, computing began with analog computers, characterized by their ability to work with continuous physical quantities. These machines leveraged mechanisms like gears, levers, and voltage levels to perform computations. They excelled in solving differential equations and real-time simulations **thanks** to their innate capacity to model physical systems accurately. However, the rise of digital computing marked a significant shift. Digital computers operate with discrete data encoded in binary digits (bits), representing either 0 or 1. This binary language forms the basis for algorithms and software, enabling immense computational power and versatility. Digital machines, using transistors and integrated circuits, brought about an era of rapid calculations, data storage, and manipulation.

My Ph.D. thesis was modeling and control of **"Fluidized Bed Heat Exchanger System"** using Analog and Digital computers. At IIT Delhi, a computer lab that housed an analog machine, a digital machine and the Fluidized bed heat exchanger system was set up in the late seventies! It was called the 'Hybrid Computer Lab'. It was a luxury **for me** to have an exclusive hybrid system for modeling and control of the heat exchanger in those days!

In 1981, the IBM PC was released in the market with Intel 8088 chip and Microsft's DOS operating system. Then, the PC revolution started with Apple releasing its own Mac computers. Now, after decades, we are entering into another revolution.

Quantum Leap: Beyond the Binary

Enter quantum computing - a realm where the laws of quantum mechanics dictate computation. Unlike classical computers that rely on bits, quantum computers utilize quantum bits or qubits. Qubits harness the unique principles of superposition and entanglement, allowing them to exist in multiple states simultaneously and share correlations beyond what classical bits can achieve.

The Fundamental Difference

Analog computers compute through direct representation of physical variables, whereas digital machines process discrete data using bits. Quantum computers, on the other hand, exploit quantum phenomena to process information in ways that defy classical computational boundaries. In a **layman's** language, Current Digital machines are SINGLE LANE Transporters whereas Quantum machines are **MULTI-LANE** Transporters making it possible to achieve enormous speed & capability.

T Jeevanandam, a native of Pollachi came to Tokyo in 198. Currently working as Chief Technology Officer in a large Japanese Engineering company. From serving as the editor of ICAT (Indian Community Activities in Tokyo) to leading the coordination of Pongal for the last 33 years, Jeeva-san has been very active in the Indian diaspora in Tokyo. He has regularaly contributed to Pongal Malar on technology topics.

Computing Revolution

T. Jeevanandam

The Power of Quantum Supremacy

One of the most remarkable features of quantum computing is its potential for exponential acceleration in specific problem-solving domains. Tasks that would take **years** for classical computers to solve might be accomplished within feasible timeframes by quantum machines. For instance, complex optimization problems, cryptographic algorithms, drug discovery simulations, and understanding molecular structures could be revolutionized by harnessing quantum supremacy.

The Present Landscape:

Today, several companies such as IBM, Google and research institutions have built small-scale quantum computers with dozens of qubits. These machines are still in their early stages, prone to errors, and not yet capable of outperforming classical computers for most tasks. However, they're starting to demonstrate their potential in specific areas like drug discovery, materials science, and financial modeling.

One noteworthy example is IBM's Quantum Experience platform, which allows anyone with an internet connection to experiment with a few-qubit quantum computers. This democratization of technology is crucial for fostering innovation and accelerating the development of practical applications.

Challenges on the Horizon

Despite the promising prospects, quantum computing faces hurdles such as maintaining qubit stability, error correction, and scalability. The delicate nature of qubits makes them susceptible to de-coherence - the loss of quantum information. Overcoming these challenges is essential for realizing the full potential of quantum computing in practical applications.

Conclusion

The transition from analog to digital computing marked a **giant step** in human history; and the advent of quantum computing signifies **a quantum leap**. While analog and digital machines revolutionized computation in their respective eras, quantum computing ventures into uncharted territories, promising unparalleled computational prowess. As quantum technologies advance and researchers overcome obstacles, the impact of quantum computing on various fields will be profound, reshaping industries, scientific discoveries, and our understanding of the universe. Quantum computing is not merely an evolution; it is a revolution poised to redefine the boundaries of what we can compute and comprehend.

While there might not be a standard comparison chart that encapsulates all aspects of analog, digital, and quantum machines in a single format due to the complexity and evolving nature of these technologies, I can certainly provide a simplified comparison to highlight some key differences between them:

Aspect	Analog Machines	Digital Machines	Quantum Machines
Representation	Works with continuous variables	Processes discrete binary data	Utilizes quantum bits (qubits)
Basic Unit	Typically uses physical variables	Uses bits (0s and 1s)	Utilizes qubits in superposition and entanglement based on binary logic gates Utilizes quantum algorithms exploiting quantum phenomena
Operation	Solves differential equations and simulations	Executes algorithms and software programs	Leverages quantum properties for specific problem-solving tasks
Information Storage	Utilizes physical mechanisms for data representation	Stores data in digital form (0s and 1s)	Utilizes quantum states for information storage and manipulation
Speed and Efficiency	Effective for specific mathematical models and real-time simulations	calculations and versatile for various applications	Rapid Potential for exponential acceleration in certain computations (quantum supremacy)
Challenges	Less versatile and limited scalability	Vulnerable to errors, scalability challenges	Faces issues related to qubit stability, error correction, and decoherence

This comparison is a simplified overview and doesn't cover all aspects comprehensively. The field of quantum computing is continuously evolving, and the comparison might vary based on specific advancements, algorithms, and technological developments in each domain.

IBM Condor: In December 2023, IBM unveiled the Condor, the first-ever quantum processor with over 1,000 qubits (quantum bits), marking a significant milestone in the field. Now, the quantum journey has started.



IBM expects to build quantum computers of increasing complexity over the next few years, starting with those that use the Condor processor or multiple Heron processors in parallel. CARL DE TORRES/IBM

Source: https://spectrum.ieee.org/ibm-condor

Funabori campus opened on December 1st

Monday～Friday 8:30～18:30
Age: 1.5～6 years old

Opening campaign (Enrollment fee)
30,000 JPY →10,000 JPY

Address : 4-5-16 Funabori (3min from Funabori station)

★Should you wish to discuss enrollment opportunities, kindly reach out to us using the following contact details.

TEL:03-6821-1171 / WhatsApp:090-1504-3183
Email: info@smile-international-school.com
https://www.smile-international-school.com

Book for meeting

website

Smile International School

கோயில்கள் வரலாற்றுக் களங்கள்

ச. கமலக்கண்ணன்

தனிமைச் சுவையுள்ள சொல்லை -- எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்டதில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் -- தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ்மீதில்

யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்குப்படி இன்று தமிழர்கள் வசிக்காத இடம் என்ற ஒன்று இவ்வையத்தில் எங்குமே இல்லை எனுமளவுக்கு எங்கெங்கு காணினும் தமிழர் நாம் பல்துறைகளில் ஆதிக்கம் செலுத்தி வருகிறோம். தமிழர்கள் எண்ணிக்கைக்கேற்ப அயலகங்களில் சங்கங்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவது கண்கூடு. பல்வேறு காரணங்களுக்காக ஒரே பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட சங்கங்கள் இருப்பது இன்றைய இந்தியச் சூழலில் தவிர்க்கவியலாதாக இருக்கிறது. எனினும் எல்லா நதிகளும் கடலை நோக்கியே என்பதுபோல எல்லாச் சங்கங்களின் குறிக்கோளும் தமிழ், தமிழர், தமிழ்நாடு உயர்வை நோக்கியே இருப்பின் சிறப்பே.

சிறார் திறமை வளர்த்தல், மகளிர் உரிமை பேணுதல், வறுமைத்தளை அறுத்தல், சமத்துவம் பாராட்டுதல் எனத் தமிழர் நம் முன் இருக்கும் பணிகள் ஏராளம். இளமைப் பருவம் முதலே இவற்றை விழுமியங்களாகக் கொண்டு காலந்தோறும் வாழ்ந்துவந்த எண்ணற்ற மன்னர்களின் தலைவர்களின் வழிகாட்டலில் இன்று தமிழ்நாடு உயரிய நிலையை அடைந்திருக்கிறது. கலைகளுடன் இயைந்த வாழ்வு வாழும் தமிழர்களுடன் இவ்விழுமியங்கள் பிணைந்து வந்திருப்பதற்குச் சங்ககாலம் தொட்டே பல இலக்கியங்கள் சான்று காட்டுகின்றன. நம் மரபின் சிந்தனைத் தொடர்ச்சியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்ல இச்சங்கங்கள் பயன்படவேண்டும். மரபும் சிந்தனையும் மட்டுமின்றி இயற்கை வளங்களையும் பண்பாட்டுச் செல்வங்களையும் சேதமின்றி அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்கவேண்டும் என்பதிலும் உலகத் தமிழர்க்கு மாற்றுக்கருத்து ஏதும் இருக்காது.

இந்தச் சூழலில்தான் இலக்கியங்களிலிருந்தும் வரலாற்றிலிருந்தும் பாடங்கற்றல் என்பது இன்றியமையாததாகிறது. கடந்துவந்த பாதை தெரிந்தால்தான் செல்லவிருக்கும் பாதை தெளிவாகும். நல்ல இலக்கியங்கள் எல்லாமே வாழ்வைப் பற்றிய கேள்விகளை எழுப்பும்.

திரு. ச. கமலக்கண்ணன், வரலாற்றிலும் இலக்கியத்திலும் மொழியியலிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். 2004ம் ஆண்டு முதல் வரலாறு டாட் காம் [www.varalaaru.com] என்ற மின்னிதழை நடத்தி வருகிறார். தமிழ்-ஜப்பானிய மொழிகளுக்கிடையேயான இலக்கண ஒப்புமைகளை ஆராய்ந்து வருகிறார். வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் [NRTIA] ஜப்பான் கிளையின் துணைத்தலைவர் மற்றும் மக்கள் சிந்தனைப் பேரவை ஜப்பான் கிளையின் ஆலோசகர்.

பழந்தமிழ் இலக்கியங்களைச் சங்ககாலம், சங்கம் மருவிய காலம், பக்தி இயக்கக் காலம், பிற்காலம் எனக் காலவரிசைப்படுத்தலாம். சங்க இலக்கியங்கள் கி.மு 3 முதல் கி.பி 3ம் நூற்றாண்டு வரை இயற்றப்பட்டவை என்பது பெரும்பாலான தமிழறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவு. பல நூல்கள் காலவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருந்தாலும் திருக்குறள், தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் நமக்குக் கிடைத்திருக்கின்றன. தமிழ்நாட்டைக் களப்பிரர்கள் ஆண்ட சங்கம் மருவிய காலத்தை இருண்டகாலம் எனச் சொல்பவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அண்மையில் பல ஆய்வறிஞர்கள் களப்பிரர் காலம் இருண்டகாலம் அல்ல என நிரூபித்திருக்கிறார்கள்.

89 தமிழ் பிராமி கல்வெட்டுகளையும் 21 முற்கால வட்டெழுத்துக் கல்வெட்டுகளையும் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.ஆறாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தவை எனத் திரு. ஐராவதம் மகாதவன் தொகுத்திருக்கிறார். பதினைந்திற்கும் மேற்பட்ட செப்பேடுகள் கி.பி. 250ல் இருந்து கி.பி 600 வரையிலான காலகட்டத்தில் வெளியிடப்பட்டதாகக் கல்வெட்டறிஞர்களால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரம் உள்ளிட்ட ஐம்பெருங்காப்பியங்களும் நீலகேசி முதலான ஐஞ்சிறுகாப்பியங்களும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் சிலவும் இக்காலத்தில் இயற்றப்பட்டதாகத் தமிழறிஞர்கள் ஒப்புக்கொள்வர். எனவே, களப்பிரர் காலத்தை இருண்டகாலம் என இனியும் கூறுவது பொருத்தமற்றது.

பக்தி இயக்கக் காலத்தில் உருவான திருமுறைகளும் பிற்காலத்தில் இயற்றப்பட்ட திருவாசகம், கம்பராமாயணம், பெரியபுராணம் போன்றவையும் அன்றைய காலகட்டத்தின் அரசுமுறை, மக்கள் வாழ்க்கைமுறை, பொருளாதாரம் போன்றவற்றைப் பதிவுசெய்து வரலாற்றுப் புதையல்களாகக் கண்சிமிட்டுகின்றன. இவற்றிற்கு இணையான வரலாற்றுக் களங்களாகத் திகழ்பவை தமிழ்நாட்டுக் கலைக்கோயில்கள் என்றால் மிகையாகாது. கல்வெட்டுகளில் வெளிப்படுவது மட்டுமின்றிக் கட்டட அமைப்புகளிலும் சிற்பங்களிலும் எண்ணற்ற வரலாற்றுத் தகவல்களைக் கொண்டு தட்டுவார் திறனுக்கேற்பத் திறக்கும் கதவுகள் அவை. சங்ககாலத்தில் செங்கல், சுதை, மரம், உலோகம் ஆகியன கொண்டு கட்டப்பட்டுவந்த இறையகங்கள் கி.பி ஆறாம் நூற்றாண்டில் பல்லவப் பேரரசர் மகேந்திரவர்மர் காலத்தில் மாற்றம் பெறுகிறது. அதுவரை கருங்கல் என்பது அமங்கலமாகக் கருதப்பட்டு வந்ததா எனத் தெரியவில்லை. ஆனால் விழுப்புரம் அருகிலுள்ள மண்டகப்பட்டு என்ற இடத்தில் முதன்முதலில் மலைப்பாறையைக் குடைந்து மும்மூர்த்திகளுக்கும் கோயில் எடுப்பித்த மகேந்திரவர்மர் கல்வெட்டில் வெளிப்படையாக "என்றும் அழியாத இறைவனுக்கு என்றும் அழியாத கருங்கல்லால் இத்தளியை எடுப்பிக்கிறேன்" என வெட்டி வைத்துள்ளார். அதிலிருந்து கோயில்களும் சிற்பங்களும் கல்லெழுத்துக்களும் அழியாவரம் பெறத்தொடங்கின.

கட்டடக்கலைக் கூறுகளை வைத்து அக்கட்டுமானத்தின் காலத்தை எவ்வாறு கண்டறிவது என வரலாறு.காம் மின்னிதழில் தொடர் கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. கோயிற்கலை ஆய்வுகள் மூலமாக வரலாற்றை

வளப்படுத்தும் பணியைத் திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையத்தினர் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக மேற்கொண்டு வருகிறார்கள். காலந்தோறும் வரலாற்றாய்வுகள் புதிய தரவுகளுடன் மீளாய்வு செய்து புதுப்பிக்கப்படக் கோயில்களே நமக்குப் பெருந்துணையாக இருந்திருக்கின்றன. கல்கியின் மாபெரும் வரலாற்றுப் புதினமான பொன்னியின் செல்வனுக்குக் கதைக்கருவைத் தந்தது காட்டுமன்னார்கோயிலில் இருக்கும் ஒரு கல்வெட்டுதான் என்றால் உங்களால் நம்பமுடிகிறதா? வரலாற்றில் உடையார்குடி என்றழைக்கப்படும் இன்றைய காட்டுமன்னார்கோயில் அனந்தீசுவரர் கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டில்தான் சோழ இளவரசன் ஆதித்தகரிகாலன் கொலை செய்யப்பட்டதும் அவரைக்கொன்ற ரவிதாசன், சோமன் சாம்பவன், பரமேசுவரன் முதலானவர்களை அருமொழி என்கிற இராஜராஜசோழன் தண்டித்ததும் பதிவாகியுள்ளன. இந்த ஒரு வரியை வைத்துத்தான் கல்கி அவ்வளவு பெரிய புதினத்தைப் புனைந்திருக்கிறார்.

பல்லவ வம்சத்தில் முதலாம் நரசிம்மவர்மர் என்றொரு மன்னர் வாழ்ந்ததற்கான சான்று திருக்கழுக்குன்றம் குடைவரைக்கோயிலில் இருக்கும் ஒரு கல்வெட்டுதான் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? உலகப் புராதனச் சின்னமாக விளங்கும் கங்கைகொண்ட சோழபுரத்தை எழுப்பியவர் முதலாம் இராஜேந்திரர் என்று நமக்கு எப்படித் தெரிகிறது? சோழதேசத்தில் எங்குமே இத்தகவல் பதியப்படவில்லை. பாண்டியநாட்டின் தெற்கெல்லையில் இருக்கும் கன்னியாகுமரிக் கோயிலில் இராஜேந்திரசோழரின் மகன் வீரராஜேந்திரர் கல்வெட்டு இல்லாவிடில் இன்றும் கட்டியவரைத் தேடிக்கொண்டே இருந்திருப்போம். பல்வேறு மன்னர்களின் பள்ளிப்படைக்கோயில்கள் (இறந்தவரின் நினைவாக எழுப்பப்படும் கோயில்) கொண்டிருக்கும் கல்வெட்டுகளின் வழியாக அவற்றை எடுப்பித்தவர்கள் மற்றும் ஆட்சியாண்டுகளைக் கொண்டு சோழர் பரம்பரையின் ஒவ்வொரு மன்னரும் எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை ஆட்சி செலுத்தினார்கள், எப்போது மறைந்தார்கள் என நம்மால் வரையறுக்க முடிகிறது.

இந்தப் பள்ளிப்படைகளில் குறிப்பிடத்தகுந்தது குடந்தை நகருக்கு வெளியில் இருக்கும் பஞ்சவன்மாதேவி பள்ளிப்படை. பஞ்சவன்மாதேவி இராஜராஜசோழரின் மனைவியருள் ஒருவர். இவர் இறந்தபோது நினைவாக இக்கோயிலை எழுப்பியவர் இராஜேந்திரசோழர். தனது தந்தையின் ஐந்தாவது மனைவிக்கு மகன் கோயில் எடுப்பித்தது உலக வரலாற்றிலேயே எங்கும் காணவியலாத அதிசயம். பஞ்சவன்மாதேவியின் மீது எத்தகையதொரு மதிப்பும் மரியாதையும் இருந்தாலொழிய இது சாத்தியம்? அவ்வாறு மரியாதை ஏற்படப் பஞ்சவன்மாதேவி எத்தகைய குணநலன்களைக் கொண்டிருக்கவேண்டும்? இதுபோல் தமிழ்நாட்டுக் கோயில்கள் நமக்கு அள்ளித்தரும் வரலாற்றுப் புதையல்கள் ஏராளம்.

மேலே குறிப்பிட்டதுபோல் திருச்சிராப்பள்ளி டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம் அரை நூற்றாண்டுகளாக வரலாற்றுப்பணி செய்துவர வித்திட்டதும் ஒரு கோயில்தான். உறையூர் பஞ்சவர்ணசாமி கோயிலுக்கு முனைவர் இரா. கலைக்கோவன் அவர்கள் தற்செயலாக வழிபாட்டுக்காக சென்றிருந்தபோது

அங்கு ஒரு தூணிலிருந்த மிதிவண்டிச் சிற்பம் கண்ணில் பட்டது. மிதிவண்டி முதன்முதலாக ஐரோப்பாவில் 19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போதைய வடிவத்தை அடையச் சிலகாலம் பிடித்தது. இந்தியாவுக்கு, தமிழ்நாட்டுக்கு, திருச்சிராப்பள்ளிக்கு 20ம் நூற்றாண்டின் துவக்கத்தில் வந்திருக்கவேண்டும். அப்போது உறையூரில் திருப்பணியில் ஈடுபட்டிருந்த ஒரு சிற்பி தெருவில் யாரோ மிதிவண்டி ஓட்டுவதைப் பார்த்து அதைச் சிற்பமாக வடித்திருக்கவேண்டும். இப்படித்தான் வரலாற்றுத் தகவல்கள் கோயில்களில் பதியப்படுகின்றன என்ற புரிதலும் அது ஏற்படுத்திய ஆர்வமும்தான் வரலாற்றாய்வு மையம் உருவாகக் காரணமாக அமைந்தது.

எனவே, மரபின் சிந்தனைத் தொடர்ச்சியைக் கடத்துதலின் ஒரு பகுதியாகக் கோயில்களையும் சிற்பங்களையும் கல்வெட்டுகளையும் பாதுகாக்கவேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமையாகிறது. இன்றைய சூழலில் கோயில்கள் அழியவும் பொலிவிழக்கவும் காரணமாக அமைவது பக்தர்களின் அறியாமையால்தான். நாத்திகர்கள் அவரளவில் கோயில்களுக்கு வருவதை விரும்புவதில்லையே தவிர இடிப்பதோ சிதைப்பதோ இல்லை. பெரும்பாலும் திருப்பணிகளின்போதுதான் கட்டடக்கலைக் கூறுகள் இடம்பெயர்ந்து காலக்குழப்பத்தை ஏற்படுத்துவதும் கல்வெட்டுகளின்மீது சிமெண்ட் பூசப்பட்டு வரலாறு மறைக்கப்படுவதும் சிற்பங்கள் வண்ணங்களால் உருமாற்றப்படுவதும் இயல்பாக நடக்கிறது. உதாரணமாக, வைகுந்தரென்றும் வைகுந்த நாராயணரென்றும் காஷ்மீரில் கொண்டாடி வணங்கப்படும் இறைத்திருமேனி அமைதி நிறைந்த மனித முகம், பன்றி முகம், நரசிங்க முகம், குதிரை முகம் ஆகியன கொண்ட அரிய விஷ்ணுவடிவம். அவரது தேவிதான் லட்சுமி, கீர்த்தி, ஜெயா, மாயா எனும் நான்கு பெண் தெய்வங்களின் ஒருங்கிணைந்த வடிவமான சக்திசதுஷ்கா. இந்தியாவிலேயே இராஜஸ்தானில் ஒரு சிற்பமும் திருச்சிராப்பள்ளி அருகிலுள்ள திருச்செந்துறை பெருமாள் கோயிலில் ஒரு சிற்பமும்தான் உள்ளன. இத்தகைய பின்புலத்தை அறிந்த வைணவர்கள் இன்று திருச்செந்துறைக்குச் சென்று சக்திசதுஷ்காவைத் தேடினால் கிடைப்பது நவநாகரிக வண்ணப்பூச்சால் அலங்கோலமாக்கப்பட்ட ஒரு கோட்டச்சிற்பம் மட்டுமே.

தொல்லியல்துறையிடம் கட்டுமானங்களையும் சிற்பங்களையும் எழில் குன்றாமல் பாதுகாக்கும் தொழில்நுட்பம் இருக்கிறது. அறநிலையத்துறையிடம் கோயிலைத் திறம்பட நிர்வகிக்கும் கட்டமைப்பு இருக்கிறது. இவ்விரு துறைகளின் இணைவால் கடந்த பல பத்தாண்டுகளில் எண்ணற்ற திருக்கோயில்கள் அவற்றின் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டுக் குடமுழுக்குக் கண்டிருக்கின்றன. எனவே தனியாரும் முடிந்தவரை வரலாற்றுக் கண்ணோட்டம் கொண்டு பழமையைப் பாதுகாக்க உளம்கொண்டால் நம் முன்னோர் நமக்களித்த வரலாற்றுக்களங்கள் கம்பீரம் குறையாமல் நிமிர்ந்து நின்று நமக்கு வழிகாட்டும். பக்திதான் கோயில்களின் முதன்மையான நோக்கம் என்றாலும் கோயில்களை இழந்துவிட்டால் வரலாற்றை இழக்கவேண்டி வரும் என்பதையும் வரலாற்றை இழந்த இனம் இவ்வுலகில் எத்தகைய நிலையை அடையும் என்பதையும் தமிழ்ச்சங்கத்தார் அறிந்திருப்பார்கள் என்பது திண்ணம்.

பிடிவாதம்...

மகாதேவன்

அம்மா ...தன்னுடைய 83வது வயதில் கூட சுறுசுறுப்பாய் வீட்டை வலம் வந்து கொண்டிருப்பவள்.... மார்கழிப்பனியைக்கூட பொருட்படுத்தாமல், சில்லென்ற தண்ணீரில் 5 மணிக்கே தன்னை தயார் படுத்திக்கொண்டு, தலையில் ஆரஞ்சு நிற ஸ்கார்ப் கட்டியபடி , வாசல் கோலம் போடுவாள்...நடுக்கும் குளிர் ஆனாலும் , கோலம் நான் தான் போடுவேன் என்ற பிடிவாதம்.

அம்மா இன்றில்லை...வேலை பார்க்கும் காலத்திலேயே **தான்** நினைத்ததை எப்படியாவது செய்துவிடவேண்டும் என்ற குணம் கொண்டவள் ...

டயபெடீஸ்க்கு மருந்து எடுத்துக்கொண்டிருந்தாலும், வாரம் ஒரு முறையாவது பேரனிடம் கெஞ்சி ரவா தோசையும், ஒரே ஒரு குளோப் ஜாமூனும் வாங்கி வரச்சொல்லி, ஆசையாய் சாப்பிடும் அந்த பிடிவாதம் அவ்வப்பொழுது குடும்பத்திலும் ஊடுருவும்.

நானும் மனைவியும் வெளிநாட்டில் வேலை பார்ப்பதால், அதன் தாக்கம் குறைவாய் தெரிந்தாலும், கூடவே இருக்கும் என் இரண்டு பசங்களுக்கும் அது தினசரி போராட்டமாய் இருந்தது.

கைநிறைய பென்ஷன் வாங்கும் ஒரு ஒய்வு பெற்ற **அரசு** ஊழியரிடம், **நீங்கள்** எதிர்பாராத பிடிவாத குணங்கள், என் அம்மாவிடம் நிறையவே இருந்தது.

பத்து வருடம் முன்பு, **அம்மாவிற்கு** காலில் ஒரு நோய்தொற்று அறுவை சிகிச்சை நடந்தது. அப்பா ஒரு முறை அம்மாவிற்காக பரிசளித்த முருகன் டாலரை மருத்துவ பணியாளர்கள் **எடுக்க** முற்பட, அதை கழட்டவே மாட்டேன், என் உயிர் போகும்பொழுது மட்டுமே அதை கழட்டுவேன் என்று மிகப்பிடிவாதமாய், லோக்கல் அனஸ்தீசியா கொடுக்கும் வரை பிடிவாதம் பிடித்தவள் அம்மா.

வயது ஆக ஆக, பிடிவாதத்தின் உச்சம் தொட ஆரம்பித்தாள் அம்மா...அது தனக்கான இருப்பை அந்த வீட்டில் நிலைநிறுத்த என்ற நிலை மாறி, கூட இருப்பவர்களின் நிம்மதி தொலைக்கும் ஒரு அன்றாட நிகழ்வாய் மாற ஆரம்பித்தது.

ஒரு நாள் அதிகாலை, என் இரண்டு பசங்களும் தொலைபேசியில் புலம்பியதின் சாராம்சம், அம்மா அந்த வீட்டின் பிரச்னைக்கான மைய புள்ளியாய் மாறிவிட்டாள் என்பதே...

இதற்கு முடிவு காணவேண்டிய நிலைக்கு நானும் என் மனைவியும் தள்ளப்பட்டோம் ...

இதற்கு ஒரே வழி, அம்மாவை கொஞ்ச காலம் பிரச்னையிலிருந்து தள்ளி வைப்பது .... என்ன செய்யலாம் என்ற யோசனையின் முடிவாய் , எங்கள் நினைவுக்கு வந்தது எங்கள் உறவினர் நடந்து ஓல்ட் ஏஜ் ஹோம் ....சகல வசதிகளும் நிறைந்த ஒரு பாதுகாப்பான இடம் ...முடிவு செய்து அம்மாவிடவும் நாசூக்காய் சொல்லியும் விட்டோம்.

கத்தி கூப்பாடு போட்டு முடிந்த வரை போகாமல் இருக்க செய்வாள் என்ற எங்கள் நினைப்புக்கு மாற்றாய், அம்மா அமைதியாய் இருந்தாள். அன்றிலிருந்து அம்மாவிடம் நிறைய மாற்றம் தெரிந்ததை தொலைபேசி மூலம் தெரிந்து கொண்டேன்.

ஒரு வேளை, இது ஒரு விதமான நாடகமாய் இருக்கும் என்று நினைத்தேன். அதற்காக வேலையை தள்ளி போடாமல், அம்மாவை ஓல்ட் ஏஜ் ஹோம் அனுப்பும் வேலையை துரிதமாய் செய்ய ஆரம்பித்தேன்.

த.மகாதேவன் கட்டபொம்மனின் கைதின் பின்புலத்தில் , கட்டுக்கட்டாய் புனையப்பட்ட கதைக்களமாம் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிறந்து, திருச்சியை வாழ்விடமாய் கொண்டிருப்பவர்....மலேஷியாவில் பணியாற்றிய பத்து வருட காலம் , டோக்கியோ தமிழ் சங்கத்துடன் கலை இலக்கிய ஒருங்கிணைப்பாளராய் 2020ல் ஹாஃப் ஷோரில் இணைந்து , இரண்டு வருடமாய் அமீரகத்தில் ஒரு மென்பொருள் நிறுவன அலுவலக மேலதிகாரியாய் பணி புரிபவர் ...பாடகர்,கவிஞர்,சிறுகதை எழுத்தாளர்

மனைவியை விட்டுவிட்டு, நான் மட்டும் எமெர்ஜென்சி லீவ் எடுத்து, வீடு வந்து சேர்ந்தேன்,

மறுநாள் காலை, மூத்தவனோடு அந்த ஓல்ட் ஏஜ் ஹோம் சென்றேன்.

அம்மாவிற்கான அறை தயார் நிலையில்.... காற்றோட்டமான அறை ...வலது பக்க ஜன்னல் வழியே பார்த்தால், அந்த பூந்தோட்டம் மிக அழகாக இருந்தது. அங்கு இருப்பவர்கள் எல்லோர் முகமும் பிரகாசமாய் இருப்பதாய் உணர்ந்தேன் ...மனம் கொஞ்சம் சமாதானம் அடைந்தது.

உறவினரிடம் கிளம்பும் போது சொன்னேன்...இன்னும் ரெண்டு வருஷம் மாமா...வீட்டு கடன் அடைஞ்சதும் நான் ஊருக்கு திரும்பிடுவேன் ...அதுக்கப்புறம் அம்மா என்கூடதான் வச்சுப்பேன்.... ஒரு ரெண்டு வருஷம் பத்திரமாய் பாத்துக்கங்க...பேசும்பொழுதே கண்களில் கண்ணீர் வர, நா தழு தழுக்க நாசூக்காய் அழுகையை தவிர்ததேன்.

கிளம்பி வரும்பொழுது மூத்தவன் கேட்டான்.... நாங்க மேனேஜ் பண்ணிக்கிறோம்பா ...பாட்டி எங்க கூட இருக்கட்டும் ப்ளீஸ் என்றவனிடம் , மெதுவாய் சொன்னேன் ....பாட்டிக்கும் ஒரு சேன்ஜ் இருக்கட்டும்டா...

ஷி நீட்ஸ் எ ஷாக் டிரீட்மென்ட் ...என்றதும் அவன் முகத்தில் கவலை ரேகை படர்ந்தது எனக்கு நன்றாகவே தெரிந்தது.

மூன்றாம் நாள் காலை...ஹோம் செல்வதற்காக ஆம்புலன்ஸ் தயாராய் வந்தது...அம்மா என் காரில் வர மாட்டேன், ஆம்புலன்ஸ் தான் வேண்டும் என மீண்டும் பிடிவாதம் பிடித்ததால், இந்த ஏற்பாடு.

அம்மா அதிகாலை எழுந்து, சுவாமி படம் முன் நின்று எதோ வேண்டினாள். பிறகு, குளிக்க சென்றாள் ...

நானும் பசங்களும் தயாராய் காத்திருக்க, அம்மா ரூமிலிருந்து வரவே இல்லை ...

அரை மணி நேரம் காத்திருந்து வராததால், ரூமினுள் சென்று பார்த்தேன்...

அம்மா படுக்கையில் படுத்திருந்தாள்...அவளுடைய முருகன் டாலர் தரையில் கிடந்தது ...

கற்றதை எழுதுகிறேன்

அசோக் மு

சொந்த அனுபவம் - இளநரையிலிருந்து விடுபடுவது எப்படி?

அதாவது என்னை மாதிரி இளைய தலைமுறையினரை மனசளவுல ரொம்ப கஷ்டப்படுத்துறது காதலோ, கல்யாணமோ இல்ல. இளநரைதான்.

அப்போ எனக்கு பன்னெண்டு பதினாறு வயசு இருக்கும் - சரியா ஞாபகம் இல்ல. அப்போவே எனக்கு ஒன்னு ரெண்டு வெள்ளை முடி வந்துடுச்சி.

இப்போவே இளையதலைமுறைனா அப்போ இன்னும் சின்ன பையன் பாருங்க..வந்த ரெண்டு வெள்ளை முடியையும் கண்ணாடில பார்த்து புடுங்கிட்டேன்.

என்னோட அம்மா அப்போவே சொன்னாங்க, இப்படி பண்ணா நெறய வந்துடும்னு.

அவுங்க விட்ட சாபம் அவ்வளவு சீக்கிரம் பளிச்சிடும்னு நான் நினைக்கவே இல்லை.

வந்துடுச்சி வெள்ளை முடி கண்ணாபின்னான்னு.

பெப்பர் & சால்ட் மாதிரி இருந்து இருந்தாலாவது *manage* பண்ணி இருக்கலாம். *But* பெப்பரே இல்லாம வெறும் சால்ட் மட்டும் இருந்தா...ஒரு வயசு பையன் வெளில "தலை" காட்ட முடியுமா? முடியல.

பேமிலி டாக்டர்கிட்ட போனேன். "அதை எல்லாம் ஒன்னும் பண்ண முடியாதுப்பா"ன்னு அவரோட தலையை தடவிகிட்டே சொல்லிட்டாரு(அவருக்கு எனக்கு மேல இருக்கு வெள்ளை முடி).

இறைவா, என்னை இப்படி கைவிட்டுட்டியேன்னு அன்னைக்கி நைட் எல்லாம் அரை தூக்கத்துல கடவுளை திட்டிகிட்டு இருந்தேன்.

வந்தது அந்த நல்ல செய்தி... எங்க ஊருக்கு ஒரு புது மூலிகை வைத்தியர் வந்து இருக்காருன்னு.

அவரோட பேரு....அதை விட்டுடலாம்....அதை சொன்னா நம்ம எல்லாருக்கும் மறுபடி நரைச்சிடும்..அவ்வளவு நீளம்.

அவரோட ஸ்பெஷாலிட்டியே நரைமுடியை குணமாக்குறதுதான்.

அவரு எனக்கு சொன்ன மருத்துவதுனாலதான் நான் குணமடைஞ்சேன். அதைதான் உங்களுக்கும் சொல்ல நெனச்சேன்.

அசோக் மு. ஜப்பானில் 23 வருடங்களாக IT துறையில் இருப்பவர். கவிதை, சிறுகதைகள், கட்டுரைகள் எழுதுவதில் ஆர்வம் கொண்டவர். ஜப்பானின் சிறந்த நகைச்சுவை பேச்சாளர். தோக்கியோ மாநகரின் பட்டிதொட்டியெங்கும் மற்றும் தமிழ் சங்கங்கள் நடத்தும் பட்டிமன்றங்கள் எங்கும் இவர் பேச்சுக்கள் தெறிக்கும். மனைவி, மகளுடன் தோக்கியோவில் இருபது வருடங்களுக்கு மேலாக வசிப்பவர்.

மருத்துவம்

==========

இளநரைக்கு சிறந்த நிவாரணி கருவேப்பிலைதான்.

விடிய விடிய முழிச்சி உங்க வீட்டுக்கு பக்கத்துல இருக்க பஜாருக்கு போய்டுங்க. அங்க *usual* ஆ பாட்டிங்கதான் கருவேப்பிலை விப்பாங்க.

அதுல நல்ல பாட்டியோட கடையை தேர்ந்தெடுத்து அவுங்ககிட்ட ரெண்டு கொத்து கருவேப்பிலை வாங்கிடணும்(20 ~ 30 grams).

அதுல இருக்க கருகி போனது, முத்துனது எல்லா இலையையும் நீக்கிடனும்.

நல்ல இளசா, துளிரா இருக்க இலைகளை மட்டும் எடுத்து, கழுவி, சுத்தமான தண்ணில 30 நிமிஷம் ஊறவிட்டுடனும்.

ஊறுன அப்புறம் அதை மைய மைய பேஸ்ட் மாதிரி அரச்சிடனும்.

(அம்மியில அரைச்சா better. மிக்ஸியில கூட அரைக்கலாம் ஆனா பேஸ்ட் ரொம்ப சூடாகிட கூடாது)

அரைச்ச அந்த பேஸ்ட் ஐ வெறும்வயித்துல(பல் தேய்ச்சிட்டு!) சாப்பிடணும். சுவைக்கு வேணும்னா கொஞ்சமா உப்பு சேர்த்துக்கலாம். ஆனா ரொம்ப கொஞ்சமாதான் உப்பு சேக்கணும்.

இந்த process ஐ ஒரு மண்டலம் (48 நாள்) தொடர்ந்து பண்ணனும். அந்த 48 நாளும் காபி, டீ குடிக்கவே கூடாது - இது ரொம்ப முக்கியம்.

48 நாள் முடிஞ்சி, அடுத்த நாள், 49 ஆவது நாள்தான் நமக்கு இனிய நாள்.

காலைல எழுந்ததும் உங்களுக்கு புடிச்ச கோயிலுக்கு போய்ட்டுவந்துட்டு..

பக்கத்துல இருக்க மெடிக்கல் ஷாப் இல்லன்னா மளிகைகடைக்கு போய் Godrej ஹேர் டை(Natural Black) வாங்கி, தலை முழுக்க தேய்ச்சிட்டு முப்பது நிமிஷம் ஊறவிட்டு குளிச்சிட்டீங்கன்னா...

இருந்த நரை எல்லாம் தடம் தெரியாம போய் இருக்கும்.

நன்றி.

Save Our planet!

Vanisree Vairavan

Landscapes ravaged by storm, scorching sun, long summers and warm winters have become common scenes around the world. Blaming global warming and running AC all day long is the only way out for most of us.

We have damaged our planet by polluting air and water, depleting forests, littering every part of the planet with wastes to the extent that, it's just a matter of time before earth becomes inhabitable. Migrating to a new planet to solve all these problems sounds to be an easier solution. But in reality, mankind is nowhere near ready to fly off this planet for good.

So, taking immediate actions to save our planet has become inevitable.

Thanks to the initiatives taken by various organizations and companies, "sustainability" and "eco-friendly" have become the buzz words. Companies in many fields such as food, logistics, medicine, fashion and space to name a few have started taking initiatives to incorporate sustainability into their current workflow as well as into future projects.

While we look up to space agencies to find us new habitable planets, they are also incorporating sustainability in various aspects of space exploration; through the use of 3R's REDUCE, REUSE, RECYCLE.

REUSE

Use of reusable rockets is a big step as it helps in reducing the cost of space explorations and reduces a lot of space debris (trash in space). NASA first came up with sustainable spacecrafts like Challenger, Discovery, Atlantis and Endeavor. Similarly, SpaceX succeeded in creating reusable launch vehicle (rocket)-Falcon 9. ISRO is also developing technologies like RLV-TD as a step towards making its own reusable rockets.

REDUCE

Manufacturing equipment and vehicles for space exploration is not only expensive, but it also creates a lot of wastes. In contrast to traditional methods of scraping, the use of 3D printing technology which uses just the right amount of materials required, is contributing in reducing wastes.

RECYCLE



In space explorations, carrying things to space is very difficult and expensive. So NASA has developed a Refabricator which recycles plastics and converts it into polymer bars to make new objects like cutlery, wrench, small equipment parts etc. needed on board using 3D printers.
It even recycles the plastic packaging material which is used to wrap things while carrying them into space.

The international space station even recycles resources such as oxygen and water. 98% of water used on board is recycled and converted into pure drinkable water. These technologies have helped in reducing the dependency on supply deliveries from earth which are extremely expensive.

Vanisree, a regular contributor to Pongal Malar was born and raised in Bangalore. She has been living in Japan for over 25 years. She likes traveling and hiking.

Many of the technologies used for space exploration have helped to address issues on earth as well. The water purification technology used in space has been utilized for purifying water in many countries facing acute shortage of safe drinking water.

While industries & government organizations are focusing on sustainability, there are many initiatives started by small companies and individuals which are extremely effective and needs more recognition. Following are few inventions and initiatives from India as compiled by MTG, an educational blog.

Rice husk furniture

Four IIT Kharagpur students developed a method to make furniture from husk which is leftover after separating rice grains. This husk is usually wasted but if used effectively, this innovation can help reduce deforestation.

Edible cutlery

A Telangana-based entrepreneur started an eco-friendly unit to produces edible cutlery using wheat, salt, and millet mixed with rice. These edible cutleries withstand hot and cold liquids and do not break, dissolve or crumble.

Natural dyes made from temple flowers

A social entrepreneur from Bihar, has refined the natural dye procurement process from flowers placed in religious places and uses it to create natural dyes for khadi clothing.

According to Caliedoscope (website), a Gujarat-based company has innovated a technique to recycle Tetrapak and plastic material into reusable building material such as roof sheets, furniture etc.

There are many interesting inventions and innovations from Japan.

InnoUvators, a website which introduces visionaries and technologies introduces Muraki Kazumi, who developed a small suitcase size portable CO2 collecting device when he was a teenager. Invented in 2017, this device absorbs CO2 and purifies the surrounding.

After joining Tokyo University, Muraki-san is now working on using the CO2 absorbed by his device and converting it into useful resources like Methane. He says that by using his latest invention, products such as clothes, pet bottles and practically anything which are created by petroleum by-products can be now created using the CO2 absorbed from atmosphere.

Many initiatives and efforts by various organizations, companies and individuals are bringing hope but the herculean task of remediating earth, its atmosphere and ecosystems can be possible only if each one of us do our part.

We all can contribute by making small changes to our actions by doing the same things in a sustainable way! It can be as simple as opting for eco bag instead of a plastic bag or using bicycle instead of car for small errands or throw trash in right recycle bins.

We should never think that a small sustainable action of an individual won't have any effect. Imagine the impact it would make if billions of humans do it together! We can save EARTH 🌍 our precious home!

Citations:

3R Initiative | United Nations Centre for Regional Development. https://uncrd.un.org/content/3r-initiative. Accessed 12 Jan. 2024.

Group, SAE Media. *NASA's ReFabricator Recycles Waste Plastic into New Parts*. https://www.techbriefs.com/component/content/article/37861-nasa-s-refabricator-recycles-waste-plastic-into-new-parts. Accessed 12 Jan. 2024.

"Sustainability and the Space Sector." *EVONA*, https://www.evona.com/blog/sustainability-and-the-space-sector/ Accessed 12 Jan. 2024

"Falcon 9." *Wikipedia*, 9 Jan. 2024. *Wikipedia*, https://en.wikipedia.org/w/index.php?title=Falcon_9&oldid=1194463423

Full Circle: NASA to Demonstrate Refabricator to Recycle, Reuse, Repeat - NASA. 28 Aug. 2017, https://www.nasa.gov/missions/station/full-circle-nasa-to-demonstrate-refabricator-to-recycle-reuse-repeat .

"NASA Now Recycles 98% of Astronauts' Urine and Sweat." *Freethink*, 2 July 2023, https://www.freethink.com/space/water-recycling-iss

"Top Eco-Friendly and Green Inventions from India." *MTG Blog*, 7 Nov. 2022, https://blog.mtg.in/top-eco-friendly-and-green-inventions-from-india/.

Lawrence, Levine. "Eco-Friendly Ideas from India!" *Caleidoscope | Indian Culture, Heritage*, 29 Apr. 2013, https://www.caleidoscope.in/eco-ideaz/eco-friendly-ideas-from-india

"How One Young Scientist Developed a Semi-Portable CO2 Collection Device." *InnoUvators*, https://innouvators.com/en/article/10001/ Accessed 12 Jan. 2024.

TBIS learners are
ENGAGED

STEM

TBIS learners are
CREATIVE

ROBOTICS

TBIS learners are
PRACTICAL

SCIENCE FAIR EXPERIMENTS

TBIS

TOKYO BAY INTERNATIONAL SCHOOL

We Care,
We Inspire
@ TBIS

Kindergarten to High School

ADMISSION OPEN

Cambridge Primary, Cambridge Lower Secondary, IGCSE and A Levels

Contact
Email: enquiry@tokyobayinternationalschool.org
ph: 080-7668-2020

http://www.tokyobayinternationalschool.org | ph:03-5875-1997
1-18-9 , KAMEIDO, KOTO KU , TOKYO

A Member of
Global Schools Program

Cambridge Assessment International Education
Cambridge International School

TBIS learners are
ACTIVE

Soccer

Rugby

Karate

TBIS learners are
RESPONSIBLE

SDGs

TBIS

EMPOWERING STUDENTS TO BE SUCCESSFUL GLOBAL CITIZENS

Collaborations

MOU with JAA for Japanese High School and College program

MOU with SRM Public School, India for Educational,Cultural and Student Exchange program

'Thathastu'- So Be It

Prasanna

Meet Roy. Roy is an 11-year-old lad who goes to class 7. He has long unkempt hair, thick glasses, carries an oversized lunch box and a shabby schoolbag with all the Marvel characters on it ragged and peeling off. Yet, he is one merry fellow.

Roy's mother passed away 3 years back. Roy's dad did not remarry. Roy goes to a day school in BowBazar. His dad *(being a government servant)* drops Roy off at school every morning at 8:30 AM and rushes to be at office on time. Between 8:30 Am to 8:55 AM Roy has nothing to do. All other kids arrive at 8:55.

Roy keeps a small notebook in his school bag's side pouch along with a pencil. Every day he writes a few sentences of a story in that small notebook. He recently got into this practice inspired by one of the English classes he attended. His teacher Mrs.Seema spoke about Ruskin Bond and his strange stories. She read out some of his stories and he got inspired.

Today Roy is excited because its preparation day for the annual event. It would be a full day of fun and no hard studies. He started writing for today a new story. He wrote about a fat mustached sweet seller making 'Rosogullas' and 'Sandesh'. He wrote about kids who would come and give him trouble by misleading him as a group and steal a few sweat meats and run away. He also wrote about his wife who was always angry with him for being innocent and kindhearted. He wrote about how the sweet seller's wife hated the kids and would 'shoo' them away when they came around. He also started writing about how the fat sweet seller found a broken pot on his way back from the market but kept it to store some trivial stuff …

The school bell rang. Roy had lost track of time. It was 8:55. He closed his small notebook and kept it in his bag. He looked up and saw Ritwik running towards him. Behind him Mrinal, Tapan and Aparna were holding hands and walking slowly.

"Look what I got" he said to Roy. Ritwik opened his fist and showed him 2 stickers. One of Captain America and other of Iron Man. Roy smiled and picked the Iron Man sticker stating "Awesome" and they rushed off to the classroom.

Roy and Ritwik sat next to each other in class. They were happy and mischievous last benchers. Ritwik used to read Roy's Story during the snack break daily at 11 AM. He liked the way Roy thought and also used to give Roy some ideas, which Roy would patiently listen but not incorporate. Ritwik didn't mind it.

Today Ritwik read Roy's story during the class hours itself. He started laughing at the way Roy had described the fat sweet seller. Both were caught by the ear and asked to stand outside the class by their teacher for disturbing the class.

Giggling away, they enjoyed their time outside class they were looking at the birds, tying threads to the rear of dragonflies and make them fly like kites and throwing paper balls into the next classroom.

Roy took out from his shorts pocket and showed Ritwik the new pencil he had written the story with today. He had found it in the ground while walking from the main gate to the tree under which he usually sits and writes stories till 8:55 AM. The bell rang and it was break-time.

Prasanna - a skilled author of both captivating short stories and immersive novels. This multi-talented person doesn't just weave tales but also dabbles in the art world, displaying prowess as an artist. Don't be surprised if you catch them melodiously humming tunes while in the bathroom, showcasing their secret passion for singing. Beyond these artistic endeavors, they navigate the IT professional realm, leveraging their tech expertise. And when the day winds down, you'll find this individual delving into the world of movies, showcasing an undying love for cinema across genres.

All kids ran out to the playground and played for 15 minutes and came back. Classes went on till 12:30 PM.

Then it was lunch break. Roy, Ritwik, Mrinal, Tapan and Aparna sat in a circle below the tree. Roy had sandwiches as usual. Roy's dad knew how to make a variety of sandwiches which not only Roy loved but also his friends. Once Roy's dad made double decker sandwiches and gave it for lunch.

It was filled with crispy potatoes and ripe mangoes which gave a different taste. The kids loved it a lot. Ritwik always brought sabji of the day with either roti or rice. Aparna brought fried food with a milkshake. Mrinal brought fish or mutton curry and rice. Tapan brought his favorite today – Prawn and Luchi. Lunch was for an hour. They always ate for 15 minutes, rushed to the water point, and washed their hands, mouth and lunch boxes and in a hurry and then went off to play.

Roy and Ritwik walked back home today. Roy's father had a report submission today and had asked him to walk back to home with Ritwik. The best part of this walking back to home was the chance to buy something interesting with their pocket money.

Today, as Roy and Ritwik were walking back via Kolkata Girls high school, they saw a new shop had come up for snacks and sweets. Ritwik suggested they buy something to eat from here and go to the nearby park and spend some time. Roy took out 40 Rs and went and stood in front of the shop. He saw ChomChom, Kadapak, Mishti Dhoi, Roshomalai and Chanar Goja in the first row. He was already drooling. Without lifting his head, he gave the 40 Rs note to the vendor of sweets and asked for Chom Chom and Chanar Goja. He heard a voice which was of a heavyset man "Would you like some rabdi as well?" he asked.

Roy lifted his head and saw the man. The sweet Vendor was a bald fat buy with a big mustache. The shocking part was he looked exactly like the man he had imagined and written about. His mouth was sealed. He couldn't respond to his question. Ritwik stepped in and said "No, only Chanar Goja and Chom Chom. "

They took the sweets and were about to leave when they heard a voice from inside shriek at the man. "What the hell did you do today morning? Did you give away some sweets free? 6 of the Roshogullas don't add up to account." The voice said. A trickle of sweat ran down the man's neck and he smiled impishly and winked at the boys and mouthed silently "Wife Trouble". Roy and Ritwik understood and left the place immediately.

"Did you see what I saw?" asked Roy.

"Could be pure coincidence," said Ritwik.

"Too much of a coincidence, isn't it?" yelled Roy.

The sweets made them forget the incident and they walked home happily from the park.

Next Day morning Roy wrote about a policeman who lost his shoe in front of a temple. On the way back home Roy and Ritwik saw a lot of commotion at a place. They slowly went closer to see a policeman shouting at a flower vendor stating that his one shoe was stolen and how was he supposed to go back in one shoe?

Ritwik and Roy froze and looked at each other. It was happening again. They quickly moved away from that place and opened the notebook and saw that the pages written in the past 2 days had vanished from his notebook. They were stunned. Roy wanted to go home and tell his father about his incident. Ritwik said there is a still a chance of coincidence and wait for a third time before confirming that it actually works. Roy held on to the pencil safely. Both Roy and Ritwik believed strongly that the pencil was doing the magic.

The next day at Lunch, when Roy and his friends were having a happy meal, a lady visited them along with the headmaster who said she wanted to speak to Roy. Roy saw the woman and fainted face first into his lunchbox. Ritwik stood up and was running around the school playground shouting "It Works…It Works…It Works.". The headmaster scratched his head awkwardly and the kids laughed out loud.

The lady smiled. She looked exactly like Roy's mom.

பாரதியை கண்டடைதல்

ரா.செந்தில்குமார்

பாரதியார், காந்தியடிகள் போன்ற ஆளுமைகளை அணுகி புரிந்துகொள்வதற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது அவர்கள் பெயர்களின் முன்னெட்டாக வரும் மகாகவி, மகாத்மா போன்ற பட்டங்களே என்று நான் நினைப்பதுண்டு. இதுபோன்ற பட்டங்கள் அவர்களுக்கு மிக பொருத்தமானவை என்ற போதிலும், மிகச்சிறிய வயதிலேயே இந்த பட்டங்களுடன் மாபெரும் ஆளுமைகளாக அவர்கள் நம்முடைய மனதில் வந்துவிடுவதால், அவர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல. எனவே, அவர்களுக்கு அசாதாரண காரியங்கள் எளிதாக சாத்தியம் என்கிற புரிதலில் கொஞ்சம் விலகி வந்துவிடுகிறோம். அவர்களை உயரத்தில் வைத்து பூஜிக்கிறோமே தவிர புரிந்துகொள்வதில்லை.

அப்படி பாரதி மிகச்சிறிய வயதிலேயே அறிமுகமானாலும், பாரதியை கண்டடைதல் என்பது ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலக்கட்டத்தில் நிகழ கூடும். அந்த அற்புத தருணத்தை, பொன்கணத்தை கண்டடைவது நமக்கே நமக்கான தேடலின் மூலமே சாத்தியமென்று நம்புகிறேன். அப்படி கண்டடையும் பாரதி இன்னும் நெருக்கமானவன். நான் கண்டுக்கொண்டது அப்படி ஒரு கணத்தில் தான். பதினாறு, பதினேழு வயதில் அந்த வயதுக்கே உரிய அபத்தங்களை செய்து, அதன் பலனாக அவமானத்தில் கூனி குறுகி நின்றிருக்கும் சூழலில், சட்டென்று ஒரு பொறி போல் மனதில் மந்திரமாய் அந்த வாக்கியம் ஓடியது.

"துச்சமாக எண்ணி நம்மை தூறு செய்தபோதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே!
இச்சகத்துளோரெல்லாம் எதிர்த்து நின்றபோதினும்
அச்சமில்லை அச்சமில்லை, அச்சமென்பதில்லையே!"

இந்த வரிகள் எத்தனையெத்தனை மனிதர்களை அவர்கள் கைவிடப்பட்டசூழலில் கலங்கரை விளக்கமாய் நின்று காத்திருக்க கூடும்?

"வானகமே, இளவெயிலே, மரச்செறிவே நீங்களெல்லாம் கானல் நீரோ, வெறும் காட்சிப் பிழைதானோ? காண்பதெல்லாம் மறையுமென்றால், மறைந்ததெல்லாம் காண்போமென்றோ !" என்கிற வரிகள் மூலம் நான் கண்டடைந்த பாரதி ஒரு ஞானி.

"ஆகாவென்று எழுந்தது பார் யுகப்புரட்சி!" என்று ரஷ்ய புரட்சியை கண்டு சிலிர்க்கவும், பிஜி தீவின் கரும்பு தோட்டத்திற்கு அடிமைகளாக கொண்டு செல்லப்படும் தமிழர்களையெண்ணி, *"துன்பக்கேணியிலே எங்கள் பெண்கள் அழுத சொல் மீட்டு முரையாயோ"* என்று கலங்கும் பாரதி ஒரு மானுட நேசன்.

"சுட்டும் விழி சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ
வட்டகரிய விழி கண்ணம்மா வான கருமை கொளோ
பாயுமொளி நீ எனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு"

என்றெல்லாம் உருகும் பாரதி ஒரு தீராக் காதலன். திகட்ட திகட்ட காதலில் திளைப்பவன் அவன்.

"உச்சிமீது வானிடிந்து வீழ்ந்துவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

என்கிற வரிசையில்*"கச்சணிந்த கொங்கை மாதர் கண்கள் வீசுபோதினும்"*, என்கிற வரியை சேர்க்கும் பாரதி ஒரு குறும்புக்காரன்.

ரா.செந்தில்குமார் மன்னார்குடியை பூர்வீகமாக கொண்டவர்.. ஜப்பான், தோக்கியோவில் 22 ஆண்டுகளாக வசித்து வருகிறார். ***இசூமியின் நறுமணம்*** மற்றும் ***பதிமூன்று மோதிரங்கள்*** என இரு சிறுகதை தொகுப்புகள் வெளியாகி பரவலான கவனத்தை பெற்றுள்ளது. சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதி வருகிறார்.

மூத்தவர் சம்மதியில் வதுவை முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனோடி இது பார் கன்னத்து முத்தமொன்று

என்று கொஞ்சுபவன் அவன்.

"*கண்ணன் என் காதலன்*", என பாடிக்கொண்டே, "*அல்லா... அல்லா... அல்லா*", எனவும் பாரதியால் எழுத முடிந்தது. தன்னுடைய பூணூலை கழட்டி எறிந்தவர் பாரதி. ஆனால் கனகலிங்கத்திற்கு பூணூல் அணிவித்து மேலும் கீழும் இனி இல்லை என்று பாடும் சமத்துவவாதி பாரதி.

இப்படி வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும், ஒவ்வொரு காலக்கட்டத்திலும் பாரதியை புதிது புதிதாக நாம் கண்டடைந்துக்கொண்டேயிருக்கிறோம். வாழ்வின் எந்த தருணத்துக்கும் ஏற்ற ஒரு வரியை பாரதி எழுதியிருப்பார்.



ஓவியம்: எழுத்தாளர் தாநி

தமிழின் முதல் சிறுகதை, பாரதியால் எழுதப்பட்டது. முதல் குறுநாவல் பாரதி எழுதியது. காலமிஸ்ட் எனப்படும் பத்தி எழுத்தை பாரதிதான் முதலில் ஆரம்பித்து வைக்கிறார். புதுக்கவிதையின் வேர் அவர்தான். எனவேதான் நவீன இலக்கியத்தின் பிதாமகனாக பாரதி போற்றப்படுகிறார். பாரதிக்கு பின் வந்த அனைத்து கலைஞர்களுமே பாரதியின் வழித்தோன்றல்கள்தான். இசையாக இருக்கட்டும், இலக்கியமாக இருக்கட்டும் பாரதியின் பாதிப்பில்லாதவர் இருக்க முடியாது.

ஒரு பத்திரிக்கையாளனாக வாழ்வினை தொடங்கி, கவிஞனாக, கட்டுரையாளனாக, சிறுகதை எழுத்தாளனாக, காவியகர்த்தவாக, தேசாபிமானியாக, பல மொழிகளை கற்றுதேர்ந்தவனாக, நவீன சிந்தனையின் ஊற்றுமுகமாக என எத்தனையோ முகங்களை கொண்டவன் பாரதி.

இன்றைக்கிருக்கிற எந்த தகவல் தொடர்பு வசதியுமில்லாத 1906ஆம் வருடத்திலேயே பாரதி உலகத்தை உற்று நோக்குபவராக, முதலாம் உலக போர், உலக நாடுகளின் அரசியல், ஒவ்வொரு நாட்டிலும் நிகழும் சம்பவங்கள் என எல்லாவற்றை பற்றியும் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

"*கலைசெல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்*' என்றால் அது வெறும் வாய் வார்த்தைகளல்ல. *பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்* என பாடிய பாரதி சமஸ்கிருத மொழியில் இருந்து வேதங்களை, பகவத் கீதையை, பதஞ்சலி யோக சூத்திரம், வியாசபாரதம் போன்றவற்றை தமிழில் மொழிபெயர்த்தார். வங்காளத்தில் எழுதப்பட்ட தாகூர் கதைகளை தமிழில் மொழிபெயர்த்தார். ப்ரெஞ்சு, ஆங்கிலம் என பல மொழிகளில் எழுதப்பட்ட அற்புதமான கவிதைகளை அவர் மொழிப்பெயர்த்தார். ஜப்பானிய ஹைக்கூ கவிதை ஒன்றையும் தமிழில் மொழிபெயர்த்தார் பாரதி.

தீப்பட்டு எரிந்தது
விழுமலரின்
அமைதி என்னே!

என்பது அந்த ஜப்பானிய ஹைக்கூ.

பாரதி மொழிபெயர்த்த ஹைக்கூவின் மூலம்: 焼けにけりされども花は散りすまし

பாஷோவின் சீடரான தாச்சிபனா ஹொகுஷி(立花北枝), தனது வீடு எரிந்து சாம்பலானபோது தனது தோட்டத்திலிருந்த மரம் ஒன்றிலிருந்து மலர் அமைதியாக விழுவதைப் பார்த்தபொழுது எழுதிய கவிதை.

இடுக்கண் வருங்கால் நகுக என்றார் வள்ளுவர். இடர்களை அமைதியோடு எதிர்கொள்ளச் சொல்கிறது ஜப்பானிய ஹைக்கூ.

தாச்சிபனா ஹொகுஷி

வாழ்ந்த 39 வருடங்களில் அவர் இத்தனை பணிகளைச் செய்தார் என்பது மகத்தான ஒரு சாதனை. தாமச பேயை கண்டு தாக்கி மடித்திடலாகும் என்று அவர் சோம்பலுக்கு எதிராக முரசுக்கொட்டி தனது வாழ்வை முன்னெடுத்தார்.

இந்திய ஆன்மீகவாதிகளை ஜப்பானுக்குச் செல்லும்படி அவர் அறைகூவல் விடுத்திருக்கிறார். அமெரிக்காவை விட ஜப்பான் நமக்கு எல்லா வகையிலும் சிறந்ததொரு நட்பு நாடு. அங்கு நமது ஆன்மீகம் வளரவேண்டுமென்று அவர் ஆசைப்பட்டிருக்கிறார். ஏனெனில், ஜப்பானிய மொழியில் இந்தியாவை தேவலோகம் என்று அழைக்கிறார்கள் என்று பாரதி தனது கட்டுரையில் குறிப்பிட்டு இருக்கிறார். இது எனக்கு வியப்பை அளித்தது. இந்தியாவை இந்தோ என்று தானே ஜப்பானியர்கள் அழைக்கிறார்கள். அதற்கு பொருள் தேவலோகம் இல்லையே என்று ஆராய்ந்தால், அந்த காலத்தில் ஜப்பானியர்கள் இந்தியாவை தென் ஜிக்கு என்று அழைத்திருக்கிறார்கள் என்கிற உண்மை புரிந்தது. தென் ஜிக்கு (天竺) என்றால் தேவலோகமென்றே பொருள். இப்படி பாரதி கொடுத்த அழைப்பை ஏற்று நாமெல்லாம் இன்று ஜப்பானுக்கு வந்து இந்த மண்ணில் சிறப்புற வாழ்கிறோமென்றால் அது அந்த மகாகவி கண்ட கனவு. அந்த கனவின் இன்னொரு பகுதியாக, இங்குள்ள நல் இலக்கியங்களை நமது மொழியில் கொண்டுசெல்லவேண்டும். நமது தலைசிறந்த இலக்கியங்கள் ஜப்பானிய மொழிக்கு கொண்டு வரவேண்டும். நம்மிடைய ஜப்பானிய மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றவர்கள் நிறைய பேர் இருக்கிறோம். நாம் இந்தப் பணியை முன்னெடுத்தால் அது மாபெரும் வரலாற்றுப் பங்களிப்பாக இருக்கும்.

LET'S TRAVEL BY
malaysia
株式会社KIC
KIC TRAVEL
CHENNAI SPECIAL
from : TYO/KIX/NGO/
FUK/OKA/CTS
to :
CHENNAI
ONEWAY 72,000 JPY ~
RETURN 108,000 JPY ~
Baggage
40 kgs !!
BOOK NOW
03-6868-5545
080-8385-5550
inquiry@kictravel.jp
Marusei Bldg. 3F-E 6-13-14, Nishi Kasai

உதித்தெழு

திருமதி இராஜலக்ஷ்மி ஆசைத்தம்பி

சுவர் இல்லாத ஒரு உலகில்
எங்கு நோக்கினும் சித்திரங்கள்!
எண்ணிப்பார்க்க இயலவில்லை.

நிலம் எங்கும் நிறங்களை
அள்ளி அருந்திய
ஓவியங்கள். ஓடிக் கிடக்கிறது
ஒவ்வோர் வீட்டின் முன்னும்.
சித்திரமா பெரிது... அதில்
அழகாக அரங்கேறும்
செம்மண்ணால் செய்த
விறகுகடுப்பும் அதனினும் மேல்
அமர்ந்திருக்கும் பானைகளும்
அதனை அழகாக அலங்கரித்த
மஞ்சள் கிழங்கும், மணக்கும் பொட்டும்.
அதற்குள் இறங்கி தட புடலாக
ஆட்டம் ஆட பலரும் காத்திருக்க!
குளிர்ந்த நீர், கொதிக்க தயார்!
பெண்கள் கட்டளைக்காக
நெல் மணிகள் குதிக்க தயார்!
பச்சரிசி புன்னகையுடன்
பசும் பாலைத்தேட, பனை வெல்லம் பாகென உருக,
உண்டென்று என்னையும் சேர்த்துக்கொள்
வழிகிறது, பசும் நெய் !
எனை எப்போது எடுப்பார் போல்
ஏங்குகிறது ஏலம் .. எல்லாமும் சேர்ந்து ,
தம் உயிரையே உணவாக
திகட்ட திகட்ட திங்களுக்காக
விருந்தோம்பல் விளம்ப...
பொங்கலோ பொங்கலென
பொங்கிக் கொட்ட காத்திருக்க!!
காலைக் கதிரவனும்
கண் விழிக்கிறான்...
கணக்குப் பார்க்க!
அறுவடைத் திருநாள்
இவ்வாண்டு எப்படி?

வரவும் செலவும்
வந்து பார்த்தான்.
வாய் நிறைய
உண்டும் மகிழ்ந்தும்
அசர்ந்தும் சென்றான்.

வருவது யாவும் போகும்
கிடைப்பது யாவும் தொலையும்
வாழும் நம் வாழ்க்கை
ஒன்றே நிதர்சனம்.

வந்தவை போனவை
கிடைத்தவை தொலைத்தவை.
எல்லாவற்றுக்கும் முற்பட்டது
வாழ்வெனும் நிதர்சனம்.
கவலைகளால் உறைந்தாலும்.
மீண்டும் உதித்து எழு.
என்னைப் போல்.
ஒவ்வொரு நாளும்
உனக்கானது தான்
சொல்லிச் சென்றான், அவன்.,
சிறந்த சேயோன்!

கோயம்புத்தூரில் பிறந்து வளர்ந்தவர்.ஆங்கில இலக்கியத்திலும் செய்தி தொடர்பியலிலும் இளங்கலை முதுகலை தேர்ச்சி பெற்ற பின், வேளாண்மை விஞ்ஞானி ஆசைத்தம்பியுடன் இல்லறத்தால் இணைந்து பதிநான்கு வருட காலமாக தோக்கியோவில் வாழ்ந்து வருகிறார். தமிழ் மொழியின் மீதும் கவிதைகள் மீதும் ஆர்வம் கொண்டவர். 2023 நவம்பர் மாதம் துவங்கிய ஜப்பான் மக்கள் சிந்தனைப் பேரவையின் துணைத்தலைவராக பொறுப்பேற்று, 2023 டிசம்பர் மாதத்தில் நிகழ்ந்த பாரதி விழாவினை தொகுத்து வழங்கியவர்

உதய கன்னி

மகளாக தோன்றி
தங்கையாக விளையாடி
தமக்கையாக உறவுகளுடன்
உரையாடி, மாணவியாக வளர்ந்து மனைவியாக மனதிலும்
அவன் மனை யிலும் புகுந்து
மறுமகளுமாகி மாசிலா
பிள்ளைகளுக்கு அன்னையுமாகி, முக்காலமும் முன் மாதிரியாக
அத்தையும் அண்ணியுமாகி
ஓரகத்தி, சித்தி என்றும்...
பெரியம்மா, பாட்டி என்றும்
மச்சினிச்சி, கொழுந்தியாள்
நாத்தனார், மாமியார் என்றும்
பேத்தியாக பாலாம்பிகையாக
ஒவ்வொருவருக்கும்
ஒரு பாத்திரமாக., பாத்திரத்தின் உருவமேற்ற நீராக.
அன்றாட வேலைகளின்
நடுவே அழுத்துக்கொல்லாமல்...
இத்துணை பட்டங்களும்
கௌரவங்களும் சுமப்பது
சுகம் தான் என்று ஏற்று. ,
கிருஹலக்ஷ்மிகளாய் மட்டும்
நாட்களை கடத்தாமல்
ஆசிரியை முதல்
அமைச்சர் வரை
பல துறைகளிலும்
அலுவல் பார்த்து
பதவிகளோடு பிரகாசித்து
அறம் ஆற்றும்
பெண்மையை போற்ற,
ஒரே ஒரு தினமா!
சிந்தியுங்கள்... அவளை, அனுதினமும்
தோழிக்கு தோள் கொடுக்கும்
உற்ற தோழனாக,
அர்த்தநாரீஸ்வரர்களாக,
சிவசக்தி ஸ்வரூபத்தை
சிந்தையில் வைத்து,
போற்றலாம் வாருங்கள்!
அவனின்றி
ஓர் அணுவும் அசையாது
அவளின்றி
ஆண் பிறவி கிடையாது.

Rays of Cricket in the Land of Rising Sun

Natarajan

Cricket, a sport steeped in tradition and history particularly of Indians, is finding new roots in the most unexpected places. One such place is the Land of the Rising Sun, a country renowned for its technological prowess, rich in culture and heritage, and traditional sports like sumo wrestling and judo. Over the past few years, cricket has been quietly evolving in Japan, capturing the hearts of interested expats and increasingly the locals.

In the early stages of 1863, cricket found its way onto Japanese soil, courtesy of the British, marking its introduction merely half a decade before the metamorphic Meiji Restoration. The pioneering cricket authority, initially named the Yokohama Cricket Club (YCC) and now known as the Yokohama Country & Athletic Club, was officially inaugurated in 1868. This momentous establishment owes its existence to the endeavors of JP Mollison, a Scottish tea merchant with a penchant for cricket. Notably, Mollison, who lived in Shanghai, brought his cricketing experience to bear in the foundation of the YCC, thereby laying the groundwork for the sport's legacy in Japan.

Now for many years, Japan Cricket Association (JCA) a progressive organisation is the torch bearer in driving the initiatives to cultivate interest of the game in Japan. Recognizing the potential for cricket to foster cultural exchanges, the JCA has emerged as a driving force behind the promotion and development of the sport within the country. Actively involved in introducing cricket to Japanese schools, the JCA has played a crucial role in cultivating a love for the game among the younger generation. JCA is affiliated to International Cricket Council (ICC) since 1995.

Natarajan Dhakshinamoorthy, a long-term resident of Japan has been a member of Pongal celebrations for the past 15 years. As a past time from his IT profession, has avid interest in Cricket. He has been officiating senior division cricket for many years.

JCA with the base in Sano, Tochigi prefecture is responsible for creating an international standard cricket venue, the Sano International Cricket Ground (SICG) also with the support of local government. SICG already has the privilege of hosting few international tournaments. There are 5 more grounds in Sano enjoyed by many professional divisional leagues, Japan Premier League etc. friendly tournaments and introductory events. JCA's initiative in the integration of the sport into school curricula and the establishment of youth leagues have significantly contributed to the evolution of cricket in Japan.

Japan's participation in regional and international tournaments has been a catalyst for cricket's expansion. The national team's involvement in the East Asia-Pacific (EAP) regional competitions and the International Cricket Council (ICC) tournaments has allowed Japanese players to show their skills against many other cricketing countries.

Cricket in Japan is capturing the interest of increasing number of Japanese besides the diaspora. The visibility created by Japan Men and Women teams performance in recent years and the initiatives aimed at nurturing a cricket culture at the roots, along with strategic partnerships and collaborations, are pivotal in shaping the ongoing transformation of the sport. The upward trajectory of cricket in Japan underscores its universal appeal and its power to transcend cultural barriers.

Drawing by ChatGPT (Prompt: Sumo wrestler playing cricket)

Looking ahead, the pitch is laid, the stumps are set and there are promising opportunities for cricket enthusiasts in Japan, as the sport is on the brink of securing a more prominent position within the nation's sports scene.

தமிழ் நாட்காட்டி அமைப்பு

மா. ச. சுரேஷ்

நாட்காட்டி *(Calendar)* என்பது நாளைக் காட்டுவது என்ற பொருளைக் கொடுத்தாலும், இது உண்மையில் சமூக, சமய, வணிக, நிர்வாக நோக்கங்களுக்காக நாட்களை ஒழுங்கு படுத்தும் ஒரு முறை ஆகும்.

<u>மேற்கத்திய / கிரகோரியன் நாட்காட்டி *(Western / Gregorian Calendar)* :</u>

சூரியனை அடிப்படையாகக் கொண்டது, இதில் பூமி சூரியனை ஒருமுறை சுற்றி முடிக்க ஒரு வருடம் தேவைப்படும். நவீன கருவிகள் இதை துல்லியமாக 365 நாட்கள் 5 மணி 48 நிமிடங்கள் 46 வினாடிகள் என அளந்துள்ளன. இந்த சூரிய ஆண்டு 12 தன்னிச்சையாக நியமிக்கப்பட்ட மாதங்களைக் கொண்டுள்ளது - இவை அனைத்தும் 30 அல்லது 31 நாட்களை கொண்டிருக்கின்றன, பிப்ரவரி தவிர; இது பொதுவான ஆண்டுகளில் 28 மற்றும் ஒவ்வொரு நான்காவது ஆண்டு (லீப் ஆண்டு) 29 நாட்களைக் கொண்டுள்ளது.

கிமு 46 இல் ஜூலியஸ் சீசரால் உருவாக்கப்பட்டதாக நம்பப்படுகிறது, இது பல மாற்றங்களுக்கு உட்பட்டது. 1582 ஆம் ஆண்டு போப் கிரகோரி VIII அவர்களால் முக்கிய சீர்திருத்தம் செய்யப்பட்டது. மார்ச் 25 அன்று கொண்டாடப்பட்ட புத்தாண்டு தினம் 18 ஆம் நூற்றாண்டில் ஜனவரி 1 ஆம் தேதிக்கு மாற்றப்பட்டது.

<u>இந்திய இந்து நாட்காட்டி *(Indian Hindu Calendar)* :</u>

புத்திசாலித்தனமாக சூரியன் மற்றும் சந்திரன் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டது; இது ஒரு சூரிய ஆண்டைப் பயன்படுத்துகிறது, ஆனால் அதை 12 சந்திர மாதங்களாகப் பிரிக்கிறது.

வேத இலக்கியத்தின் குறிப்புகள், கிறிஸ்தவ சகாப்தத்திற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே வேத யுகத்தின் தொடக்கத்தில் இருந்தே காலண்டர் முறை இருந்ததாகக் காட்டுகிறது. வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிற இன்றைய நாட்காட்டி, வானியல் அறிஞர்களான ஆரியபட்டா (பொ.ஊ. AD 499) மற்றும் வராகமிகிரர் (6ஆம் நூற்றாண்டு) வடிவமைத்த பஞ்சாங்கம் என்ற அடிப்படையில் அமைந்தவையாகும்.

<u>தமிழ் நாட்காட்டி :</u>

மிகவும் புத்திசாலித்தனமாக, பாரம்பரிய இந்து சூரிய நாட்காட்டியின் அடிப்படையில் உருவான ஒரு பக்கவாட்டு சூரிய நாட்காட்டி *(sidereal solar calendar)* ஆகும். சூரிய நேரம் *(Solar Time)* வானத்தில் சூரியனின் நிலையைப் பொறுத்து கணக்கிடப்படுகிறது, அதே சமயம் பக்கவாட்டு நேரம் *(sidereal time)* என்பது வானக் கோளத்தில் நிலையான நட்சத்திரங்களின் நிலையை அடிப்படையாகக் கொண்டது.

தமிழ் நாட்காட்டியானது தமிழ் நாடு, புதுச்சேரி, கேரளா, அசாம், மேற்கு வங்காளம், மணிப்பூர், நேபாளம், ஒடிசா, ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களிலும்; இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரிஷியஸ் ஆகிய நாடுகளில் உள்ள தமிழ் மக்களாலும் பயன்படுத்தப்படுகிறது.

<u>வருடத்தின் அடிப்படை:</u>

தமிழ் நாட்காட்டி 60 வருட சுழற்சியை பின்பற்றுகிறது; அறுபது ஆண்டுகள் நிறைவடைந்த பிறகு, முதல் வருடத்துடன் புதிதாகத் தொடங்குகிறது. இது இந்து "நூற்றாண்டிற்கு" ஒத்திருக்கிறது. வாக்கிய அல்லது திருக்கன்னித பஞ்சாங்கம் (பாரம்பரிய தமிழ் பஞ்சாங்கம்) இந்த ஆண்டுகள் வரிசையை கோடிட்டுக் காட்டுகிறது. இது பூமியைப் பொறுத்தமட்டில் வானத்தில் உள்ள கிரகங்களின் நிலையுடன் தொடர்புடையது. அதாவது இரண்டு முக்கிய கிரகங்களான சனி (சூரியனை ஒரு முறை சுற்றி முடிக்க 30 ஆண்டுகள்) மற்றும் வியாழன் (சூரியனை ஒரு முறை சுற்றி முடிக்க 12 ஆண்டுகள்) 60 ஆண்டுகளுக்கு பிறகு அதே நிலைக்கு வருகிறது.
தமிழ் ஆண்டு பெயர்களின் பட்டியலுக்கு :

http://www.sisnambalava.org.uk/useful-info/tamil-new-year-names.aspx

சுரேஷ் இராஜபாளையத்தில் பிறந்து வளர்ந்தவர். NIT திருச்சியில் பயின்ற பொறியாளர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஜப்பானுடன் தொடர்புள்ளவர். தற்போது முசாஷிகொசுகியில் வசிக்கிறார்.

Tamil Calendrical System

M S Suresh

மாதப் பகுப்பின் அடிப்படை:

பண்டைய தமிழகத்தில் இரண்டு வகையான மாதங்களைக் குறிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஒன்று பூமிக்கு சார்பாக சூரியனின் இயக்கத்தை வைத்தும் மற்றொன்று பூமிக்கு சார்பாக சந்திரனின் இயக்கத்தை வைத்தும் கணக்கிடப்பட்டது.

சூரியசுற்றுப்பாதையின் தளம் பூமியை மையமாகக் கொண்டு ஒவ்வொன்றும் 30 பாகை (degrees) அளவுள்ள 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் இராசிகள் எனப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட இராசிக்குள் புகுந்து அதைவிட்டு வெளியேறும் வரையான காலமே ஒரு சூரிய மாதம் ஆகும்.



படம்: இராசிச் சக்கரத்தில் சூரியனின் இயக்கத்தின் போது உண்டாகும் தமிழ் மாதங்களைக் காட்டும் விளக்கப்படம்.

ஒரு சூரிய மாதத்தில் சந்திரன் பூரணை அடையும் நாள் எந்த நட்சத்திரத்தில் வருகிறதோ அந்நட்சத்திரத்தின் பெயரே சந்திர மாதப் பெயராகக் கொள்ளப்பட்டது. உதாரணமாக, சூரியன் மேச இராசியில் பயணம் செய்யும்போது சந்திரன் பூரணை அடையும் நாளில் சித்திரை நட்சத்திரம் வரும் என்பதால் சூரிய மாதமான மேட மாதத்திற்கு உரிய சந்திர மாதம் சித்திரையாகும்.

தற்காலத்தில் தமிழகத்தில் சந்திர மாதப்பெயர்களே பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

சூரியன் மேட இராசியுட் புகும்போது பிறக்கும் சித்திரை மாதமே தமிழ் முறைப்படி ஆண்டின் முதல் மாதம் என்பதால், இந் நிகழ்வே புத்தாண்டுப் பிறப்பும் ஆகும்; பொதுவாக கிரகோரியன் ஆண்டின் ஏப்ரல் 14 அன்று வருகிறது.

ஒரு மாதத்தின் நாட்களின் எண்ணிக்கை 29 முதல் 33 வரை மாறுபடும்.

வாரம் மற்றும் நாள் :

தமிழ் நாட்காட்டியில் வாரத்தின் நாட்கள் (கிழமை) சூரிய மண்டலத்தில் உள்ள வான உடல்களுடன் (celestial bodies) தொடர்புடையது: சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி மற்றும் சனி.

நாள்	*Sanskrit*	*Planet/Deity*	*Gregorian Calendar equivalent*
ஞாயிற்றுக்கிழமை	*Ravi-vāsara*	*Sun*	*Sunday*
திங்கட்கிழமை	*Soma-vāsara*	*Moon*	*Monday*
செவ்வாய்க்கிழமை	*Mangala-vāsara*	*Mars*	*Tuesday*
புதன்கிழமை	*Budha-vāsara*	*Mercury*	*Wednesday*
வியாழக்கிழமை	*Guru-vāsara*	*Jupiter*	*Thursday*
வெள்ளிக்கிழமை	*Śukra-vāsara*	*Venus*	*Friday*
சனிக்கிழமை	*Śani-vāsara*	*Saturn*	*Saturday*

குறிப்புகள் :

Wikipedia ,

Indian Calendar System by Sadhu Paramtattva

Coffee and Corporate - From Waste to Compost!

Iyyappan Raman

In the corporate world, won't you agree that coffee is often the fuel for our efficiency in work. Every office building will have coffee machines. Depends on the size of the corporate/factory, the coffee grounds used will be in many KGs each day. But have you ever wondered what happens to those coffee grounds afterwards? Sadly, it goes to burnable waste! …もったいない。

But what if we can use this waste effectively? After we use the coffee grounds there are still lots of life (nutrient) left for reusing . But we ignore this completely! ☹.

Actually, Coffee grounds are rich in Nitrogen. We can make rich “compost” out of this. But composting needs Carbon as well. The solution is right in front of us in the corporate itself. Yes. "Shredded papers" from office. So, with both the waste materials from corporate/factory, we can make a useful compost.

Compost = "Used Coffee Grounds" + "Shredded paper"

How to make composting? Is it difficult?
Nope. Very easy. Let's break it down.

1. Have a big garden bucket (min 45L). Make a few holes in the sides to allow air to pass through so that the microorganisms can do their job better.
2. Add layer of shredded paper and then add another layer of coffee grounds. Sprinkle some water. (not too much).
3. Repeat above step and fill up the bucket.
4. Kickstart the composting activity by adding effective microorganisms. There are multiple ways to do this. To list a few.
   a. Finished compost
   b. Ground soil (which is not chemically fed)
   c. yogurt (contains Lactobacillus)
   d. Bokashi (available online) contains beneficial Microorganisms.
   Any of the above can be added in the layers in-between. That's it.

Now, we have setup the Composting process to kick start.

Tips: Cardboard boxes can also be added which will increase the composition of Carbon.

Iyyappan is living in Japan for the past 22 years. Very much passionate in organic / Natural Farming, Composting and other Sustainability topics. Iyyappan completed a certification on Permaculture as well. He is slo practising farming and composting for many years in Japan. Happy to help/assist the community in any of the farming/composting topics. Iyyappan can be reached at mail2prakash@gmail.com

In a couple of days, this mixture will get heated up. It means the process is starting in a good way. The heat will initially go up to 40~50 degree and then slowly it will cool down. After the cool-down mix the whole stuff to add some air. This oxygen introduction will increase the composting process. In each week, do this mixing step. Slowly and slowly, you can notice the change in the texture of the composting materials.



In case, if no change happened in weeks time, then there is something wrong. Either the mixture is very dry or very watery. Adjust this accordingly so that process can start working. As both the materials (shredded paper + coffee) are in their small structures it is easy for the composting process to complete. We can wait for around 4 -6 months time (it depends on various parameters and contents) to harvest the Nutritious compost!

This finished compost is an excellent medium for soil enrichment, full of organic materials and rich with nutrients. Plants will love this!

Even a small step counts and by composting our used coffee grounds, we're doing our part in reducing waste and contributing to a healthier planet.

We cannot wait for any change to happen automatically.

As Mahatma Gandhi said, **Be the change!** Let's start the change from ourselves! So why wait? Go and start the discussion with your office to initiate the compost process. In case of any queries, please send a mail to mail2prakash@gmail.com. Happy to assist!

#Happy Composting!

Photo Glimpses 2023

 மேடை அலங்காரம்	 இறை வணக்கம்
 பரத நாட்டியம்	 குட்டீஸ்&சுட்டீஸ்
 நடன சுந்தரிகள்	 சுந்தரன்களோடு சுந்தரிகள்
 மாகோராஜாவின் சுந்தரிகள்	 சர வெடி நடனம்

Photo Glimpses 2023

நாட்டியாஞ்சலி

கீதாஞ்சலி

சந்தத்தில் பாடாத கவிதை

நடனம்

நாடகம்

வழிகாட்டிக்கு நன்றி

பாடல்

நடனம்

Photo Glimpses 2023

துள்ளல் நடனம்

மெல்லிசை

தொடரும் மெல்லிசை

ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்

SunWells connects you with global companies in Japan

- A total of 1,000 Engineers belong to SunWells Japan and working in Japanese MNC companies.
- SunWells shall place you the Fortune 500 companies in Japan based on your career goal.
- SunWells shall provide you the Visa, Accommodation, Living Support, etc.

WE PROVIDE YOU A COMPLETE COMFORT TO ELEVATE YOUR CAREER, WE EDUCATE Japanese language AND OTHER PROGRAMS AS learning and development.

GLOBAL NETWORK

JAPAN (Yokohama, Tokyo, Utsunomiya, Shizuoka, Nagoya, Osaka, Hiroshima, Fukuoka)

INDIA (Chennai) USA (Texas) Singapore Vietnam (Hanoi)

SunWell Solutions Co., Ltd.

Head Office

2F Yokohama Yomiuri Building, 51-1 Yamashita-chou, Naka-ku, Yokohama JAPAN

Tel: 045-222-3384 Contact: recruit@sunwells.com

SunWells

Let Your Potential Shine

Buying a house in Japan

Mathu Narayanasamy

Gentle disclaimer: My personal experiences, yours may vary.

Owning a home is an important milestone in life for everyone. It is probably the biggest purchase in your lifetime. Depending on the type of your purchase, it can be an exhausting, yet pleasant experience. Japan is a mature market that has simplified the purchasing process. It may consume a good amount of your time, but dealing with it patiently helps you overcome the anxiety. This article tries to answer some questions you may commonly have during the process of buying.

I have decided to buy a house. How much can I afford?

Banks generally use roughly 7 to 8 times of your annual salary (gross) as a starting number to decide on how much house you can purchase.
Example: A person making 10 million a year can likely afford to buy a 70 to 80 million house

Alternatively, use an online calculator like this one to find what you can afford. Input just 2 things: (1) how much you are willing to pay every month as installment (2) loan interest rate.
https://suumo.jp/edit/simulator/

I am confused between choosing a 70 million house and an 80 million house.

Japan home loan (variable) interest rates are very attractive. For every 1-million-yen loan, repayment is only a few thousand yen.

Example: For a 0.5% interest rate, 1 million loan you will repay 2,600 yens a month. (loan period 35 years). For a 10 million loan, you will repay 26,000 yens (2,600 x 10). If your budget allows an extra 26,000 a month, you can very well choose an 80-million-yen house.

What is the true cost of owning a house?

Equal Monthly Installments / EMI (Principal you borrowed + Interest) is the minimum amount you will pay in a month whereas rent is the maximum amount you will pay if you do not own.

One-time cost at the time of buying: Roughly these add up to 8% of your purchase price Property Acquisition Tax / Real estate Agent commission (generally 5%) / Bank loan processing & guarantor fee / Maintenance cost initial lump sum (for an apartment) / Registration / Contract paperwork.

Monthly costs: It is not just EMI, but more. Add up to a minimum of 20% of your EMI for these. Consider all these costs. keep them below 25% take home pay to be stress-free.
Property Tax / Insurance (Fire, Earthquake) / Maintenance (Regular, Planned & Emergency) / Car Parking (for an apartment) / Home Security (for an independent house) / Housekeeping (in case you want to get outside help for cleaning)

Mathu is from Erode/Tamilnadu. Living 23 years in Japan, currently in Kasai area. Happy to help people especially who are new to Japan answer questions on daily life and local systems like home loan, tax system and saving options, retirement, investing etc.

Apartment or Independent house. Which one should I buy?

Both have advantages and disadvantages.

It takes more energy (=cost) to heat or cool an independent house. Apartments generally have a designated garbage area, mostly accessible 24 hours. Independent houses require great discipline in handling garbage.

(All rooms in) same floor living in an apartment can be a lot easy compared to climbing up and down via steep stairs, especially 3-storey independent houses.

A maintenance company is in place at an apartment for all the monthly maintenance work (outside of your home). Independent house requires a lot of effort from your side to deal with multiple vendors for any maintenance needs.

Noisy/active kids (cute little ones), inviting a bunch of guests, throwing an occasional party, free car parking, enjoying a higher volume tv/music all are possible without much of an issue in an independent house. Apartments can be tough for this basic living freedom too.

Land that comes with an independent house generally does not depreciate.

Merits of owning a house in Japan

Home loan variable interest rates are unbelievably low (Currently less than 0.5%). The Japanese government also offers a 0.7% to 1% tax deduction. You will be able to receive back a total of 2 to 4.8 million yen over a period of 10 to 13 years. This amount considerably offsets the interest you pay over a long period of time.

Some complicated questions require more learning and talking to homeowners.

Negotiating price, how to choose a builder, customizing layout to your liking, is it worth buying a combined housing (Living + Rental income), If I am not living can I rent it out, etc.

and finally ...

Expect to spend lots of time with your real estate agent on most weekends/ holidays before you make a purchase. Men generally look to find out financial burden/ benefits, accessibility to work, whereas women look for comfortable living & peaceful child raising. It is important to line up all your priorities (Location/ Community/ Price/ Layout etc.) together as a couple. But remember, you won't be able to get all of them. Sacrificing some priorities will be essential. There is nothing called a 'forever' home. Lifestyle changes do occur. Having an exit plan in mind while you buy is helpful. Good luck with your home buying.

பாரதிவிழா ஜப்பான் 2023

ச. கமலக்கண்ணன்

மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட பொதுமக்கள் மத்தியில் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூக உணர்வு ஆகியவற்றை ஏற்படுத்தும் நோக்கோடு 1998ம் ஆண்டில் ஈரோட்டில் தொடங்கப்பட்டதுதான் மக்கள் சிந்தனைப் பேரவை. உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கும் பேரவையின் முதல் அயலகக்கிளை ஜப்பான் தலைநகர் தோக்கியோவில் 2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் துவங்கப்பட்டது.

பேரவையின் சார்பில் தலைமையகத்தால் ஈரோடு புத்தகத் திருவிழா, பாரதிவிழா, தேசிய அறிவியல் தினம், உலகப் புத்தக தினம், அரசுப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பாராட்டுவிழா, மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள், பயிலரங்கங்கள், வாசகர் வட்டங்கள் எனப் பல்வேறு நிகழ்வுகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. ஜப்பானிலும் இங்கு வாழும் தமிழர்களுக்கேற்ற நிகழ்வுகளை நடத்த ஜப்பான் கிளை திட்டமிட்டு வருகிறது. முதல் நிகழ்ச்சியாக டிசம்பர் 10ம் தேதி பாரதிவிழா நடத்தப்பட்டது.

தோக்கியோ மாநகரின் நக்காகசாயில் அமைந்துள்ள ஷிந்தென் சமூகக்கூடத்தில் டிசம்பர் 10ம் தேதி மாலை நடைபெற்ற விழாவுக்கு ஜப்பானிலுள்ள அனைத்துத் தமிழமைப்புகளையும் நட்பு அமைப்புகளாகக் கருதி அழைப்பு விடுக்கப்பட்டது. விழாவில் கீழ்க்கண்ட 3 நிகழ்வுகள் முதன்மையானவைகளாகத் திட்டமிடப்பட்டன.

1. ஜப்பானில் குழந்தைகளுக்குத் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்குப் பாராட்டு
2. பள்ளி மாணவ மாணவியர் பாரதியார் கவிதைகளைப் பாடுதல் அல்லது ஒப்புவித்தல்
3. ஜப்பான்வாழ் தமிழர்களின் பாரதி பற்றிய கருத்துரைகள்

சுமார் 60 பேர் வருகை தருவார்கள் எனக்கருதி அரங்கை முன்பதிவு செய்திருந்த நிர்வாகிகளுக்குப் பெரும் இன்ப அதிர்ச்சி காத்திருந்தது. சுமார் 100 பேருக்குமேல் வருகைதர விருப்பம் தெரிவித்தனர். அரங்கின் கொள்ளளவு கருதி மீதமுள்ளோரை இணையவழியாக இணைய வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பேரவையின் நிறுவனர் திரு. ஸ்டாலின் குணசேகரன் அவர்களையும் மகாகவி பாரதியின் குடும்ப உறுப்பினர்கள் திருமதி. உமா சுகவனம், திருமதி. ஜெயஸ்ரீ சுப்ரமணியன் ஆகியோரையும் ஜப்பான் கிளை அழைத்திருந்தது. அவர்கள்

ஈரோட்டிலும் சென்னையிலும் இருந்ததால் அவர்களும் இணையவழியில் இணையத் திட்டமிடப்பட்டது. இணைய வழியில் இணைந்தவர்களை ஜப்பானில் **திருமதி. தா. விஜயலட்சுமி** அவர்கள் ஒருங்கிணைத்தார்.

விருந்தினர்களுக்கு ஸ்ரீபாலாஜி தென்னிந்திய உணவகம் சார்பில் தேநீரையும் பலகாரத்தையும் வழங்க முன்வந்த உரிமையாளர் **திரு. தி. குறிஞ்சி செல்வன்** அவர்களுக்குப் பேரவை மனமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறது. ஜப்பான்வாழ் நண்பர்கள் **திரு. மா. ஆசைத்தம்பி**, **திரு. அ. கோவிந்தபாசம்** ஆகியோரின் உதவியுடன் அரங்குக்குக் கொண்டுவரப்பட்டன.

உலகெங்கும் உள்ள தமிழர்கள் நிகழ்வுகளைக் கண்டுகளிக்கும் வண்ணம் ஜப்பான் கிளையின் யூடியூப் சேனலில் நேரலை தொடங்கப்பட்டது. நேரலையைக் கட்டுப்படுத்துவதையும் புகைப்படங்கள் எடுப்பதையும் **திரு. மோ. விஜய்** அவர்கள் பொறுப்பேற்றுக்கொள்ள, ஜப்பான் கிளையின் துணைத்தலைவர் **திருமதி. ச. சே. இராஜலக்ஷ்மி** அவர்கள் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கத் துவங்கினார்.

தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பிறகு ஜப்பான் கிளையின் தலைவர் **திரு. வே. கிருஷ்ணசாமி** அவர்கள் நிகழ்வுக்கு வருகை புரிந்தவர்களை வரவேற்றார். புரட்சிக்கவிஞரையும் கவிமணியையும் மேற்கோள் காட்டித் தொடங்கிய வரவேற்புரையில் பாரதியைப் போன்றே 39 வயது வரை வாழ்ந்த உலகளாவிய புகழ்பெற்ற ஆளுமைகளைக் குறிப்பிட்டுப் பேசியது பார்வையாளர்களைக் கவர்ந்தது.

தலைமைப்பேரவையின் தலைவர் **திரு. ஸ்டாலின் குணசேகரன்** அவர்கள் வழங்கிய வாழ்த்துரையில் பேரவை தொடங்கப்பட்டதற்கான நோக்கமும் அதற்கான தேவையும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. பேரவை தொடங்கப்பட்ட காலந்தொட்டே அயலகத் தமிழர்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டே வந்திருக்கிறது. அயலகப் படைப்பாளர்களின் படைப்புகளைத் தனியாகக் காட்சிப்படுத்தும் வசதி முதன்முதலில் ஈரோடு புத்தகத் திருவிழாவில்தான் செயல்படுத்தப்பட்டது. உலகத் தமிழர்களை ஒருங்கிணைக்கும் ஒரு பாலமாக மக்கள் சிந்தனைப் பேரவை செயல்படவேண்டும் என்ற வேட்கை வெளிப்பட்ட அதேவேளையில் தலைமையகத்தைப் போன்றே தமிழ்நாட்டின் 20 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் கிளைகளும் ஜப்பான் கிளையும் இராணுவக் கட்டுப்பாட்டுடன் நடத்தப்படவேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வும் விதைக்கப்பட்டது.

பாரதியின் தாய்மாமா திரு. சாம்பசிவ ஐயர் அவர்கள். அவரது பேத்தி **திருமதி. உமா சுகவனம்** அவர்களும் கொள்ளுப்பேத்தி **திருமதி. ஜெயஸ்ரீ சுப்ரமணியன்** அவர்களும் பாரதியின் குடும்பத்தைப் பற்றிய பல அரிய தகவல்களைப் பகிர்ந்துகொண்டனர். எட்டையபுரத்தில் பாரதி பிறந்த அதே இல்லத்தில் (சாம்பசிவ ஐயரின் தந்தை வீடு) அதே அறையில்தான் திருமதி. உமா சுகவனம் அவர்களும் பிறந்தார்கள். பாரதி பிறந்தபோது அந்த இல்லத்தில் நிலவிய சூழலை ஜெயஸ்ரீ அவர்கள் விவரிக்க, உமா அவர்கள் பாரதியின் பாருக்குள்ளே நல்ல நாடு பாடலை மிக அருமையாகப் பாடினார். பாரதிக்கும் சாம்பசிவ ஐயருக்கும் வயது வித்தியாசம் குறைவு என்பதால்

இருவரும் சிறுவயதில் ஒன்றாகவே இருந்திருக்கிறார்கள். பல பாடல்களுக்கு பாரதி ராகத்தைக் குறிப்பிடவில்லை. ஆனால் சாம்பசிவ ஐயர் அவற்றில் சில பாடல்களுக்கு மெட்டமைத்து அவர் தன் பெண்களை பாடச்சொல்வது வழக்கம் என்பது அனைவருக்கும் புதிய செய்தியாக இருந்தது.

பாரதியின் எழுத்துக்களில் அக இலக்கியம், உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள், வேதாந்தக் கருத்துக்கள் நிரம்பியவை, இயற்கை வர்ணனைகள் கொண்டவை என்றெல்லாம் வகைப்படுத்தக்கூடிய குயில் பாட்டின் கதை ஜப்பான் கிளையின் ஆலோசகர் **திரு. ச. கமலக்கண்ணன்** அவர்களால் சொல்லப்பட்டது. காதல் போயின் சாதல் என்ற சொல்லாடல் தமிழர்களுக்குத் தெரிந்த அளவுக்குக் குயிலின் கதை தெரிவதில்லை. நல்லது ஒன்றின் முடிவு கெடுதல் என்று பொருள்படும் பாடலைப் பாடும் குயிலின் கதையோ கெடுதல் ஒன்றின் முடிவு நல்லது என முடிகிறது. மாடனும் குரங்கனும் பேயாக மாறி பாரதிக்குக் காட்டிய மாயத்தோற்றங்கள் எல்லாம் முடிவில் மறைந்துபோய் முற்பிறவியில் தடைபட்ட குயிலின் காதல் இப்பிறவியில் கைகூடுகிறது. கதையின் இறுதியில் பாரதி தன் சமகாலத் தமிழ்ப் புலவர்களுக்கு விடுத்த "இப்பாடலுக்கு வேதாந்தமாய்ப் பொருளுரைக்க மாட்டீரோ?" என்ற வேண்டுகோளை யாராவது நிறைவேற்றினார்களா என்ற தேடல் பார்வையார்களுக்கு வேண்டுகோளாக விடுக்கப்பட்டது.

தமிழ் தொன்மை மிக்கது மட்டுமல்ல. தொடர்ச்சியும் அதன் சிறப்புதான். அதுவும் அயல்நாடுகளில் தமிழ் வளர்க்கும் பணியை ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தமிழ்ச்சங்கங்கள் மேற்கொண்டாலும் அவற்றின் ஊடகங்களாகச் செயல்படுபவர்கள் தமிழாசிரியர்கள். அந்த வகையில் ஜப்பானில் தமிழ் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பாரதிவிழாவில் உரிய பாராட்டைப் பெற்றனர்.

- குளோபல் இந்தியன் இண்டர்நேஷனல் பள்ளியின் தமிழாசிரியர்கள் **திருமதி. திவ்யபிரபா இராதாகிருஷ்ணன், திருமதி. இலாவண்யா இராகவன், திருமதி. தேவிபாலா மணிமாறன்** ஆகியோருக்கும் ஜப்பான் இந்தியன் இண்டர்நேஷனல் பள்ளியின் தமிழாசிரியர்கள் **திருமதி. வேதப்ரியா பாலு, திருமதி. பிரியா நரேஷ், திருமதி. காயத்ரி யஷ்வந்த்** ஆகியோருக்கும் ரெயின்போ இண்டர்நேஷனல் பள்ளியின் நிறுவனர் **திரு. அறிவுமுதல்வன்** அவர்களும்,
- வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் ஜப்பான் தமிழ்நாடு அரசின் தமிழ் இணையக் கல்விக்கழகத்துடன் இணைந்து நடத்தும் தமிழ் வகுப்புகளில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் **திரு. ரா. செந்தில்குமார், திருமதி. அபிநயா சுரேஷ், திருமதி. சுமித்ராதேவி கணேசன், திருமதி. கார்த்திகா குமரேசன், திருமதி. நந்தினி**

பெருமாள், திருமதி. சூரியா அற்புதநாதன், திருமதி. இராஜலக்ஷ்மி கோசல்ராம் ஆகியோருக்கு **திரு. கு. கோவிந்தராஜன்** அவர்களும்,

- ரெயின்போ இண்டர்நேஷனல் பள்ளியின் **திருமதி. சித்ரா சிவகர்ணன், திருமதி. தேன்மொழி சுரேஷ்** ஆகியோருக்குத் துளிக்கனவு இலக்கிய வட்டத்தின் நிறுவனர் **திரு. ரா. செந்தில்குமார்** அவர்களும்

பாராட்டு மடலையும் பாரதியின் நூலையும் நினைவுப்பரிசாக வழங்கிச் சிறப்பு சேர்த்தனர்.

பெருமைக்குரிய ஆசிரியர்கள் பயிற்றுவித்த மாணவர்கள் சோடை போய்விடுவார்களா என்ன? பாரதியின் கவிதைகளை ஒப்புவித்தும் பாடல்களைப் பாடியும் குழந்தைகளின் பார்வையில் பாரதி பற்றிய உரைவீச்சும் பார்வையாளர்களை மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்கவைத்தன.

- மனதில் உறுதி வேண்டும் பாடலைப் பாடிய **செல்வி. யாழினி கமலக்கண்ணன்**, யாரிந்த பாரதி என்று புதுமைப்பெண்ணாய்ப் புகழ்ந்த **செல்வி. சாரதா இராதாகிருஷ்ணன்**, பாரதி ஊட்டிய விடுதலை உணர்வைப் பற்றி உரையாற்றிய **செல்வன். சிவகார்த்திகேயன் உலகநாதன்**, செந்தமிழ் நாடெனும் போதினிலே என்று கேட்போரின் செவிகளில் தேன் பாய்ச்சிய **செல்வன். ரிஷிகேஷ் மகாதேவன்** ஆகிய குளோபல் இந்தியன் இண்டர்நேஷனல் பள்ளியைச் சேர்ந்த மாணவ மாணவியருக்கு டோக்கியோ தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் **திரு. ச. கௌரிசங்கர்** அவர்களும்
- காக்கைச் சிறகினால் மனதை வருடிய **செல்வி. மித்ரி சங்கரேஷ்**, பாரதி வேடமணிந்து மனதில் உறுதியை வலியுறுத்திய **செல்வன். கிரித்திகன் ரங்கராஜ்** ஆகிய வெளிநாடுவாழ் தமிழ் இந்தியர்கள் சங்க மாணவ மாணவியருக்கு மருதம் தமிழ்க்குழு நிர்வாகி **திரு. ரா. பாலு** அவர்களும்
- ஒளிபடைத்த கண்ணினாய் பாடலை இசைபடப் பாடிய **செல்வி. மகிழினி கிருஷ்ணசாமி**, சென்றதினி மீளாது என்று மூடரைச் சாடிய **செல்வன். யுவன் ஆசைத்தம்பி**, வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி என வாழ்த்திய **செல்வன். ஹரிச்சரண் சதீஷ்குமார்**, அச்சம் தவிர்க்க அறிவுறுத்திய **செல்வன். பாலமித்ரன் நரேஷ்**, அச்சமின்றிப் பாடிய **செல்வி. தேஜாஸ்ரீ நரேஷ்** ஆகிய ஜப்பான் இந்தியன் இண்டர்நேஷனல் பள்ளி மாணவ மாணவியருக்கு ஜப்பான் தமிழ் ஸ்போர்ட்ஸ் குழுவின் தலைவர் **திரு. அ. கோவிந்தபாசம்** அவர்களும்,

- அச்சமில்லை அச்சமில்லை என்று உரத்து மார்தட்டிய செல்வர்கள் சாய் ருத்ரன், அதர்வா தேவ் ஆகிய ரெயின்போ இண்டர்நேஷனல் பள்ளியின் மாணவர்களுக்குத் துளிக்கனவு இலக்கிய வட்டத்தின் நிறுவனர் **திரு. ரா. செந்தில்குமார்** அவர்களும்

பாராட்டு மடலையும் பாரதியின் நூலையும் வழங்கினர். இவை மட்டுமின்றி, பங்கேற்ற அனைத்துக் குழந்தைகளுக்கும் காலஞ்சென்ற எழுத்தாளர் ஞாநி அவர்கள்

வரைந்த பாரதியின் ஓவியத்தைப் பரிசாக மகிழ்வுடன் அளித்தார் **திரு. கு. கோவிந்தராஜன்** அவர்கள். நிகழ்ச்சிக்காகச் சென்னை பனுவல் புத்தக நிலையத்தில் வாங்கியிருந்த நூல்கள் குறித்த நேரத்தில் நம்மை வந்தடையாததால் மீதமுள்ள நூல்களை ஈரோட்டிலுள்ள நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் உரிமையாளர் திரு. முத்துகிருஷ்ணன் அவர்களிடம் சொல்லி அன்றே சென்னைக்கு அனுப்பினார் திரு. ஸ்டாலின் குணசேகரன் அவர்கள். அவற்றைச் சென்னையில் பெற்று நிகழ்ச்சிக்குக் கொண்டு சேர்த்த **திரு. மோ. விஜய்** அவர்கள் என்றும் நம் பேரவையின் நன்றிக்குரியவர்.

தொடர்ந்து பாரதியின் இறுக்கமான முகத்தையே பிரதிபலித்துக் கொண்டிருந்த நிகழ்ச்சியைக் கலகலப்பாக மாற்றும் விதத்தில் பட்டிமன்றப் பேச்சாளர் **திரு. மு. அசோக்** அவர்கள் தனக்கேயுரிய நகைச்சுவைப் பாணியில் பாரதியின் குறும்புத்தனங்களை இன்றைய நடைமுறை வாழ்வின் நிகழ்வுகளோடு ஒப்பிட்டுப் பார்வையாளர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினார்.

எட்டுக்குள்ளே உலகம் இருக்கு என்ற கவிப்பேரரசின் வரிகளை அறிந்த நமக்கு வாழ்க்கையின் மிக முக்கியமான 4 கட்டங்களில் பாரதியின் எழுத்துகள் எவ்வாறு துணை வருகின்றன என்பதை வாழ்வியல் நோக்கில் "வாழ்க்கைப் படிநிலைகளில் பாரதி" என்ற தலைப்பில் உரையாற்றினார் மென்பொருள் நிறுவன மேலாளர் **திரு. வ. ஆறுமுகம்** அவர்கள். பட்டாம்பூச்சிபோல் சிறகடிக்கும் குழந்தைப் பருவம், இளமை பொங்கும் வாலிபப் பருவம், பொறுப்புகள் மிகுந்த நடுத்தர வயது, முதுமை நோக்கும் முதுமைப் பருவம் ஆகியவற்றைத் தனது படிநிலைகளாகத் தேர்ந்திருந்தார். சின்னஞ்சிறு கிளியே பாடலில் உன் கண்ணில் நீர் வழிந்தால் என்று வெளிப்பட்ட பொறுப்புமிக்க தந்தையின் அக்கறை, ஏறுபோன்ற நடையினாய் என்று அளித்த ஊக்கம் ஆகியவை நிறைந்த பாப்பா பாடல்களில் தொடங்கி காற்று வெளியிலும் பாயுமொளியிலும் வீணையாகவும் புதுவைரமாகவும் காட்சியளித்த கண்ணம்மா மீதான காதல் வாழ்வைக் கடந்து பராசக்தியிடம் வேண்டிப்பெற்றதுதான் காணிநிலம் எனினும் நடுத்தரப் வயதின் இறுதியில் அதுவும் மாயை என்றுணர்ந்து முதுமைப் பருவத்தில் அடியெடுத்து வைத்துச் சொல்லுக்கடங்காத பராசக்தியிடம் சரணடைந்து, கணபதிராயனின் காலைப் பிடித்து, வெற்றி வடிவேலனின் வீரத்தைப் புகழ்ந்து, சரசுவதியின் தூமணிப் பாதங்களைத் தலைமேலேந்தி, கண்ணனின் மாம்பழ வாயின் குழலிசையில் மகிழ்ந்து இறுதியாகச் செல்வத் திருமகளின் சிந்தனையில் மூழ்கிக் காலனைச் சற்றே மிதித்ததில் அழகாக முடித்தார்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பாரதியின் எழுத்துகள் நின்றிருந்தாலும் நவீன இலக்கியத்தின் பல்வேறு கூறுகளுக்கு முதல் வித்திட்டவர் பாரதி என்ற புதிய செய்தியினை "பாரதியைக் கண்டடைதல்" என்ற தலைப்பில் எடுத்துரைத்தார் துளிக்கனவு இலக்கிய வட்டத்தின் நிறுவனர், சிறுகதை எழுத்தாளர் **திரு. ரா. செந்தில்குமார்** அவர்கள். திரு. ஆறுமுகம் அவர்கள் குடும்ப வாழ்வின் படிநிலைகளுக்கான பாரதியைக் கண்டடைந்ததுபோல் திரு. செந்தில்குமார் அவர்கள் பொதுவாழ்வின் படிநிலைகளுக்கான பாரதியைக் கண்டடைந்ததை விவரித்தார். பதின்மப் பருவத்தின் தொடக்கத்தில் ஊர்ப்பேச்சைப் புறந்தள்ள உதவிய அச்சமில்லையானது வாலிபப் பருவத்தின் முடிவில் கச்சணிந்த கொங்கை மாதரை எதிர்கொள்ளும் அச்சமில்லையாக உருமாறிய மாயாவாதத்தில் தொடங்கி, பூணூலை அறுத்தெரிந்த சமத்துவ பாரதியில் முடித்தது அவரது சிறுகதைகளைப் போலவே தெளிந்த நீரோடையாக இருந்தது. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்ற தனது வாக்குக்குத் தானே சான்றாக நின்று பதஞ்சலி யோகம், கீதை, வியாசபாரதம் ஆகியவற்றின் சாரங்களைத் தமிழில் தந்ததையும் அறிவியலாளர் சர். ஜெகதீஷ் சந்திரபோஸ் அவர்களின் கருத்துகளையும் ஜப்பானிய ஹைக்கு ஒன்றையும் மொழிபெயர்த்ததைக் கூறியது அவரது சிறுகதைகளில் ஆங்காங்கே பதிவு செய்யப்பட்டிருக்கும் உண்மை நிகழ்வுகளைப் போலிருந்தது. இறுதியாக, பண்டைய ஜப்பானிய மொழியில் இந்தியாவைத் தேவலோகம் (தென்ஜிக்கு) என்று அழைக்கப்பட்ட செய்தியையும் பாரதி தனது எழுத்தில் பதிவு செய்திருப்பதை முத்தாய்ப்பாகக் கூறித் தனது உரையை முடித்தார்.

எட்டையபுரத்திலிருந்து 75 கிலோமீட்டர்கள் தொலைவில் பாரதி இல்லத்தில் பிறந்து வளர்ந்து ஜப்பானில் தனது வசிப்பிடத்துக்கும் பாரதி இல்லம் என்றே பெயர் சூட்டிய **திரு. கு. கோவிந்தராஜன்** அவர்களின் ஆற்றொழுக்கான உரையில் பார்வையாளர்கள் அனைவரும் சேமமுற்றார்கள் என்றுதான் கூறவேண்டும். வாழ்ந்த காலத்தில் உற்றார் உறவினராலும் புரிந்துகொள்ளப்பட முடியாத பாரதியை, மரணித்து 30 ஆண்டுகள் கழித்துப் பாடலாசிரியராக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரதியை, வ.ரா.வும் ஜீவாவும் எப்படி மகாகவியாக ஏற்றுக்கொள்ள வைத்தார்கள் என்று தனது உரையைத் தொடங்கினார். பன்முகம் கொண்ட ஒரு கவிஞர் மட்டுமல்ல, புதிய செய்திகளை ஆர்வத்துடன் கற்றுக்கொண்டவர் என்பதை ஜப்பானியர்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வியலை உணர்ந்துகொள்ள முடிந்த மேற்கோளுடன் விளக்கினார். மகாத்மா காந்திக்கும் அண்ணல் அம்பேத்கருக்கும் நடந்தது, இப்போது வள்ளலாருக்கும் நடப்பதுபோல் பாரதி என்றொரு பிம்பத்தை முதன்மைப்படுத்தி ஆனால் அவரது சித்தாந்தத்தை இருட்டடிப்பு செய்யும் வேலை இன்று தமிழ்நாட்டில் நடைபெறத் தொடங்கி

இருக்கிறது. இன்றைய சூழ்நிலையில் பாரதியின் கொள்கைகளை முன்னிறுத்தி பாரதி விழாக்கள் நடத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். மொழி என்பது தகவல் பரிமாற்றத்துக்கு உரியது மட்டுமின்றி, மனிதனின் ஆகச்சிறந்த கண்டுபிடிப்பாகும். மற்ற எல்லாக் கண்டுபிடிப்புகளுக்கும் வேர் சிந்தனையைத் தீர்மானிக்கும் மொழிதான். கலப்பற்ற தூய தமிழ்ச் சொல்வளத்தைப் பெருக்குதல், இழிவான பொருள்தரும் சொற்களுக்குப் புதிய வடிவம் தருதல், குலத்தை வெளிப்படுத்தும் பேச்சு வழக்கை ஒழித்தல் ஆகியவையே தெருவெங்கும் தமிழ்முழக்கம் ஒலிக்கச் செய்வீர் என்ற பாரதி கூற்றின் பொருளாகத் தம் கருதுகோளை முன்வைத்தார். ஜப்பானிய மொழி எப்படி வணிகம், பொருளாதாரம், மருத்துவம், இயந்திரவியல் ஆகியவற்றில் தனித்தியங்கும் திறன் பெற்றுள்ளதோ, தமிழும் அந்த இலக்கை எட்டவேண்டும் என்ற தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியதோடு நின்றுவிடாமல், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவை நனவாக்கத் துறைசார் வல்லமை பெற்ற ஜப்பான்வாழ் தமிழர் பாடுபட ஏற்றதொரு வேண்டுகோளையும் வைத்தார். இதை ஒருங்கிணைக்கும் பணியை மக்கள் சிந்தனைப் பேரவையின் ஜப்பான் கிளை முன்னெடுத்து அடுத்த பாரதி விழாவுக்குள் 100 ஜப்பானியப் படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட இலக்கையும் நிர்ணயித்தார். உண்மையிலேயே தமிழ் சேமமுற வேண்டுமெனில் இத்தகைய முன்னெடுப்புகள் அவசியம்.

சுமார் 3 மணிநேரம் பாரதியின் சிந்தனைகளிலேயே மூழ்கியிருந்த விருந்தினர்களை நன்றியுரைக்கு அழைத்துவந்தார் துணைத்தலைவர் **திருமதி. சு. சே. இராஜலக்ஷ்மி** அவர்கள். காலத்தை மீறிக் கனவுகண்டது மட்டுமின்றிக் காலத்தை வென்று நிற்பதும் பாரதியின் தனிச்சிறப்பு. அதற்கு அயலகத்தில் நடக்கும் இந்தப் பாரதிவிழாவே சான்று. நன்றியுரையுடன் நிறுத்தி விடாமல், தன் கல்லூரிக் காலத்தில் கண்ணம்மா கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அனுபவங்களைப் பகிர்ந்ததும் அன்னையை வேண்டுதல், அன்பு செய்தல் போன்ற தான் விதந்த பாரதியின் வரிகளை மேற்கோள் காட்டிப் பேசியதும் அவரது ஆழ்ந்த பற்றையும் புலமையையும் பாரதி மீது கொண்டிருந்த தோய்வையும் வெளிப்படுத்தியது.

நிகழ்ச்சி முடிவுற்றபின் அன்றிரவு நிர்வாகிகளுக்கிடையே நடந்த உரையாடலில் திரு. கு. கோவிந்தராஜன் அவர்களின் வேண்டுகோளை முழுமையாக முடியாவிடினும் இயன்ற அளவு நிறைவேற்ற முன்னெடுப்புகளை எடுக்கப் பேரவையின் ஜப்பான் கிளை முடிவெடுத்தது நெகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது.

வெல்லத் தமிழ் இனி வெல்லட்டும்!
திக்கெட்டும் தமிழ் முழக்கம் ஒலிக்கட்டும்!!

WITH BEST COMPLIMENTS

STATE BANK OF INDIA TOKYO BRANCH

The Banker to every Indian - even Overseas

State Bank of India

We offer following services:

- Opening of Current Accounts for Individual customers and Corporates
- Attractive rates on Fixed Deposits in JPY & USD
- Remittance facility: Competitive Exchange Rates for Remittances in INR, USD, EUR, GBP
- NRI Services

  i) Opening of NRE/NRO Accounts in India

  ii) Account maintenance support for existing accounts

  iii) Home Loan/ Education Loan in India

SEASON'S GREETINGS FROM OUR JAPAN TEAM – WISHING YOU ALL A VERY HAPPY PONGAL

Address: Tokyo Tatemono Nihonbashi Building, 4th Floor, 1-3-13 Nihonbashi (B9 Exit), Chuo-ku, Tokyo 103-0027

Contact No: 03-3517-3711

Email: admin.tokyo@statebank.com

Code to Clicks

My Journey from Software Engineering to Photography

Paul Vincent

Introduction

Coding, Escalations, Meetings, and Algorithms are the realm of any Software Engineer. I was a software engineer, too, and my solace was always in the lines of code and the logic behind them. However, the journey of one such engineer took an unexpected turn, leading him into the captivating world of photography. In this blog post, we'll explore the transformation from debugging errors to capturing moments, highlighting the challenges, discoveries, and artistic (hopefully) evolution accompanying this shift.

Chapter 1: The Unexpected Invitation

Since childhood, I have always been passionate about nature, and in particular birds. It all began when a friend invited me to look at his photography equipment and the pictures he had taken of birds and flowers. Little did I know that this seemingly random event would lead to a significant change in my interests. The technical aspect of photography satisfied my logical brain, while the ability to capture a moment and convey emotions through images appealed to my creative side. This combination sparked a long-dormant interest in visual storytelling. I wondered if I could do it, and my friend assured me that if he could, I could, too. There, it all started 8 – 9 years back.

Chapter 2: Learning the ABCs of Aperture, Shutter Speed, and ISO

As a software engineer, I was accustomed to logical structures, algorithms, and debugging. Learning the basics of photography felt like stepping into a new universe with its rules. Aperture, shutter speed, ISO – terms that were as foreign to me as lines of code are to a novice programmer. YouTube, online tutorials, and Web courses became my new best friends as I immersed myself in mastering the technicalities of my newfound passion. "Slowly, rather slowly, over many years."

Chapter 3: The Artistic Evolution

One of my journey's most challenging but rewarding aspects was the shift from a logical, problem-solving mindset to a more artistic and intuitive one. Composition, framing, and storytelling became my new parameters for success, challenging me to think beyond the rigid boundaries of coding and embrace the freedom of creativity. I have come to understand that being creative requires practice and dedication. While it didn't come naturally to me, my wife constantly fed me with this in my initial days. I used my technical knowledge to capture her creative frames and visions in the early days. As time passed, I developed my own creative eye through a combination of passion and practice. This journey has taught me that anyone can unlock their creative potential by putting in the effort and being open to learning and growth.

Sr. manager for software engineering in hi tech semiconductor industry. Currently based out of Michigan, USA. Roots are from Trichy, Tamil Nadu, loves to travel and do photography.

Chapter 4: Finding Parallels in Tech

Surprisingly, my technical background as a software engineer turned out to be a significant asset. Understanding the technology behind cameras, lenses, and image processing felt oddly familiar, like optimizing code for efficiency. It was a realization that the analytical skills I homed in programming could seamlessly integrate into the world of photography. More so in Digital photography, where everything happens on a device (PC /Mac/Phone/Tablet), which was my forte already. In the past, photos were processed in the Darkroom, and in today's world, in the Lightroom (SW for processing Photos). This realization helped me to thrive.

Chapter 5: Balancing Act

The balancing act between my Software career and newfound passion for photography was perhaps the most demanding part of the journey. Deadlines and debugging sessions competed for my attention with the irresistible urge to capture a fleeting sunset or a spontaneous moment. Finding harmony between the two worlds required careful planning and a willingness to embrace both aspects of my identity.

Chapter 6: Community and Connections

Just as coding communities foster collaboration and knowledge-sharing, I discovered a vibrant community of photographers. Online forums, social media, local meet-ups, and workshops provided technical insights and a sense of belonging. The encouragement and constructive feedback from fellow photographers became a source of motivation, reminding me that every journey is more enriching when shared. Here is the link to my Photos: https://500px.com/p/itsvincent?view=photos

Chapter 7: Dealing with GAS (Gear Acquisition Syndrome) –

As a photography enthusiast, I struggled with Gear Acquisition Syndrome (GAS), the constant desire for new gear. My journey with GAS began innocently enough. After starting with a basic DSLR camera, the allure of higher megapixels, advanced autofocus systems, and improved low-light performance beckoned. Each new release seemed like a gateway to unlocking untapped potential in my photography. The excitement of unboxing a new piece of equipment became an addictive cycle.

I realized that upgrading my equipment overshadowed my passion's essence - capturing moments. The turning point in my journey came when I shifted my focus from accumulating gear to developing my photography skills. I invested in workshops, online courses, and dedicated practice sessions. Instead of relying on the latest technology to improve my work, I learned to leverage the capabilities of the gear I already owned. Ultimately, I discovered a profound sense of fulfillment that transcended the excitement of unboxing new gear.

Dealing with Gear Acquisition Syndrome has been a continuous process of self-awareness and discipline. While the desire for new gear may never fully dissipate, I've learned to appreciate the value of balance. By mindful evaluation, setting boundaries, and prioritizing skill development, I've found a harmonious way to nurture my passion without succumbing to the endless cycle of gear upgrades.

Chapter 8: What fueled my perseverance?

Embarking on a new hobby is a straightforward venture; what sustains it? For me, the driving force was anchored in having a purpose and witnessing the profound ripple effect that follows.

Clarity of purpose not only imparts direction but also serves as a steadfast wellspring of motivation. When I first started photography, my wife's request for her home bakery portfolio and social media provided me with a sense of purpose.

Photographing birds blossomed into a profound fascination with avian life. The ripple effect was in full force. Now, my lens not only captures the intricate details of bird species, but my curiosity has expanded into understanding their behaviors, participating in conservation efforts, and tracking their migratory journeys.

One hobby can open doors to others; this is the beauty of the ripple effect - one action can lead to endless possibilities.

Conclusion: A Fusion of Passions

Reflecting today, it appears to be a perfect fusion of passions. A software engineer's analytical mind seamlessly blended with a photographer's creative eye, creating a unique identity that embraced both worlds. As I continue to navigate this exciting intersection of technology and art, I find fulfillment in the boundless possibilities that arise when passion takes the lead.

This journey has taught me that stepping outside our comfort zones and exploring uncharted territories can lead to unexpected and fulfilling discoveries. When you take the first step, the universe conspires, and synchronicities of life happen. As I look back on my evolution from code to clicks, I can't help but feel grateful for the winding path that brought me to where I am today – a software engineer with a camera in hand, ready to capture the next unforgettable moment.

TMVS FOODS

THE INDIAN SUPERMARKET

134-0088, EDOGAWA-KU, NISHIKASAI 5-8-5-108

TEL / FAX. 03-6808-6011 MOBILE 080-3310-9409

www.tmvsfoods.jp

Email：tmvsfoods@yahoo.com

Importer of Indian Groceries & Fresh Vegetables

We deliver all over Japan.

We would like to thank the following restaurants for their contribution to Pongal 2024

SOUTH INDIAN RESTAURANT nandhini

INDIAN STREET FOOD OH BHAIYA!

アムダスラビー amuthasurabi South Indian Dining

DAKSHIN

ashoka SINCE 1968

சிண்ட்ரெல்லன்

சுகிலா

இது என் கற்பனைக் கதை.
காலப்போக்கில் காலம் மாறி விட்டது. ஆம். அரச கட்டளை காலம் மலையேறிப் போய் நாடெங்கும் அரசி கட்டளை ஆட்சியானது. அல்லது ஆண்டவன் எடுத்த உலகம் என்ற திரைப்படத்தின் முதல் பாதி *hero subject, interval*க்கு பிறகு *heroine subject.* *Vikram* படம் *interval block*ல் *mass scene, mass song* போல, "நாயகி மீண்டும் வராள் எட்டுத்திக்கும் பயம் தானே" என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

பெண்ணின் மகப்பேறு கூட நவீன விஞ்ஞானத்தில் ஆண்களே வயிற்றில் சுமந்து *macro nano endoscopic* சிகிச்சை மூலம் குழந்தையை தங்களுக்கு பிடித்த நேரத்தில் பிடித்த நட்சத்திரத்தில் வெளியில் எடுத்து பெற்றனர் (இதுவும் *delivery* தான்). அது எப்படி அவ்வளவு பெரிய தலை உள்ள குழந்தை *macro nano endoscopic*ல்(கோணி ஊசி சைஸ் ஒரு குழாயில் ஊசியின் நுனியில் எறும்பு சைஸ் காமிரா, *shrinker*(சுறுக்கி), கத்தி, உள்ளே வெளியே சென்று வர தையல் ஊசி சைஸ் ஒரு இடுக்கி *for pickup of the baby*) வெளியில் வரும் என்று கேட்பவர்கள், *"Honey, I Shrunk the Kids"* படம் பாருங்கள். வயிற்றில் உள்ள குழந்தையை *macro nano endoscopic*ன் கைபிடியில் உள்ள "1/100ல் சிறிதாக்கு" என்ற பட்டனை அமுக்கினால் குழந்தை கடுகு சைசில் சின்னதாகி *nano endoscope*ன் பைப்பின் வழியாக வெளியில் வந்து பின்னர் குழந்தையை பழைய சைசில் பெரிதாக்கும் என்லார்ஜ் ஸ்கேனர் தொட்டிலில் படுக்க வைத்தால் குழந்தை டெலிவரி சக்சஸ். மருத்துவர் குழந்தை பெற்ற கணவனிடம் *"congratulations* நீங்க அப்பாவாயிட்டிங்க" என்று கை குலுக்குவார்.

இப்படி ஒரு காலகட்டத்தில் சித்தப்பா ஒருவரின் கொடுமையில் ஒரு இளம் வாலிபன் வாழ்ந்து வந்தான். அவன் பெயர் "சிண்ட்ரெல்லன்". எப்போதுமே கிழிந்த உடை, ஆணாய் பிறந்த பாவத்தால் தினமும் வீட்டு வேலை செய்து சித்தப்பா சாப்பிட்டு போட்ட மிச்சத்தைத் தின்று உயிர் வாழ்ந்தான். திருமண வயது வந்தும் இந்த சூழலில் எந்தப் பெண்ணையும் அவன் சந்திக்கக் கூட வாய்ப்பு அமையவில்லை. சித்தப்பா படுத்தும் பாடு போதாது என்று சித்தப்பாவின் மகன்களும் சிண்ட்ரெல்லனை தினமும் சீண்டினர்.
அப்போது ஒரு நாள் திடீரென்று வீட்டுக் கதவுகள் தட்டப்பட்டன. சித்தப்பாவின் மகன்கள் கதவைத் திறந்தால் இந்தக் காலத்துக்கு ஏற்ற ஹைடெக் அரச பணியாளிகள் *A/C* உடையில் சிக்கென்று இருவர் நின்றிருந்தனர். அவர்கள் ரத்தினச் சுருக்கமாக அந்நாட்டு அழகிய இளவரசிக்கு அரசியார் வரன் தேடுவதாகவும் அதற்காக ஊரில் உள்ள அனைத்து இளம் வாலிபர்களும் அன்று இரவு நடக்கும் பார்ட்டியில் நல்ல உடையணிந்து கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டனர்.

சுகிலா என்கிற புனைபெயரில் எழுதும் வேல்ராஜன் சண்முகையா தூத்துக்குடியில் பிறந்து, மதுரையில் வளர்ந்து, தற்போது கடந்த 30 வருடங்களாக தோக்கியோவில் மனைவி சுகிலா, மகன்கள் கௌதம், அர்விந்தோடு வசிக்கிறார். இவர் பிறவி எழுத்தாளர் அல்ல. தனது தந்தையின் நினைவு தினத்தன்று தந்தையுடனான கடந்தகால பசுமையான நினைவுகளை பற்றி ஒரு பக்கம் எழுத நினைத்து பல பக்கங்கள் எழுதியதில் தனக்கும் எழுத வரும் என்று உணர்ந்து தற்போது தமிழில் எழுதுவதை பொழுது போக்காக வைத்திருப்பவர்.

இந்த தகவலை உள்ளே தரையை துடைத்துக் கொண்டிருந்த சிண்ட்ரெல்லன் கேட்டு ஒரு ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். அவனை வீட்டிற்கு வெளியில் கூட விடுவதில்லை இதில் எப்படி பார்ட்டிக்கு அனுப்புவார்கள் என்ற கவலை.

அன்று இரவு சித்தப்பாவின் மகன்கள் நல்ல உடையணிந்து பார்ட்டிக்கு கிளம்பினார்கள். அதைப் பார்த்து அழுதுகொண்டே ஏக்கமாய் வாசலில் நின்ற சிண்ட்ரெல்லனின் முன் திடீரென்று ஒரு சிறிய தேவதன் 😀 தோன்றினான் சிண்ட்ரெல்லனின் கண் மட்டத்தில் ஒரு ஹம்மிங் பறவை போல வட்டமிட்டு ஒரு சிறிய மந்திரக்கோலைப் பிடித்தான். உடனே சிண்ட்ரெல்லனின் உடை தங்க கோட் சூட்டாக மாறியது. காலில் வைரக் கண்ணாடியில் செய்த *shoe* 👟 பளபளத்தது. தலை முடி *TONI&GUY signature* கட்டின் அடையாளமாக இடது காதுக்கு மேல் *"T"*யும் வலது காதுக்கு மேல் *"G"*யும் தெரியும் படி தலையின் முடி மண்டையின் தோல் தெரிய சுரண்டப் பட்டிருந்தது. 😀 வெளியில் *auto drive Tesla car* இறக்கை விரிந்து சிண்ட்ரெல்லன் ஏற காத்திருந்தது. கண்ணாடி கதவில் செய்த இறக்கையின் உற்புறத்தில் *twitter* 😀 மெசேஜ்கள் கலர் கலரான எழுத்தில் பளிச்சென்று ஓடிக்கொண்டிருந்தது. சிண்ட்ரெல்லனால் நடப்பது எதையும் நம்ப முடியவில்லை.

அந்த தேவதன் சிண்ட்ரெல்லனிடம் நீ பார்ட்டிக்கு போய் வா, ஆனால் இது அனைத்தும் நடு இரவு *12* மணிக்கு காணாமல் மறைந்து நீயும் பழைய நிலைக்கு மாறிவிடுவாய் என்றான்.

சிண்ட்ரெல்லன் சம்மதம் சொல்லி காரில் பார்ட்டிக்குச் சென்று அந்நாட்டு இளவரசி சிண்ட்ரெல்லாவுடன் 😀 *Bale dance* 💃 ஆடினான். இளவரசிக்கு மற்ற வாலிபர்களை விட சிண்ட்ரெல்லனை மிகவும் பிடித்து விட்டது. தான் மணந்தால் சிண்ட்ரெல்லன் இல்லையேல் என் வாழ்வில் *no-men* 😀 என்று முடிவெடுத்தாள்.

அப்போது சரியாக மணி இரவு *12* ஆக *12* நிமிடங்கள் தான் இருந்தது. இதைப் பார்த்த சிண்ட்ரெல்லன் பதறிப் போய் இளவரசியை உதறி ஓட்டமும் நடையுமாக படிக்கட்டில் ஏறி தப்பிக்க வந்ததில் காலில் மாட்டியிருந்த ஒரு வைர *shoe* 👟 சிதறி கிழே நின்றிருந்த இளவரசி கையில் விழுந்தது. இளவரசி நம் குணா கமல் கையில் லட்டு கிடைத்த ஒரு பரவசம் போல் அந்த *shoe*வை கையில் வைத்து ஒரு போசில் கண்ணில் *love*ஆக நிற்க, இளவரசி சிண்ட்ரெல்லனை துரத்தி தேடும் முன் அவன் மாளிகையின் மாடியிலிருந்து வெளியில் குதித்துக் கொண்டே பழைய *MGR* பட பாணியில் விசில் அடிக்க இம்முறை *Tesla car* இறக்கை விரிக்காமல் *OI (Own Intelligence* 😀 அதன் அறிவை) உபயோகித்து *car*ன் மேல் புறம் திறந்து காற்றடித்த *seat bag*ல் அவனை உள்ளே மெத்தென வாங்கியது. 😀

அதன் பின் இளவரசி சிண்ட்ரெல்லனை தேடி அந்த ஒற்றை வைர *shoe*வை 👟 வைத்துக் கொண்டு ஊர் ஊராகச் சென்று ஒவ்வொரு வீட்டில் இருக்கும் வயசுப் பையன்களின் காலிலும் அந்த *shoe*வை போட்டுப் பார்த்து தன் சிண்ட்ரெல்லனை தேடினாள். கடைசில் உண்மைக் காதல் ஜெயித்தது. ஆம் சிண்ட்ரெல்லன் சிக்கினான் *"காலும் shoe*வுமாக*"*, சிண்ட்ரெல்லாவின் இதயச் சிறையில். பின்னர் இல்லற அறையில். 😀 *Tokyo Disney Land*ல் அவர்கள் திருமணம் முந்தைய இரவு நைட்

லைட்(ஒளி) பரேட் தொடங்கி மறு நாள் இரவு வரை *non stop*ஆக முழு இரவு அனைவரும் முழித்து, குடித்து, ஆடி மகிழ்ந்து சிறப்பாக நடந்தது.

முதலிரவு. சிண்ட்ரெல்லன் இரண்டு நாள் முழித்திருந்த களைப்பில் தூங்கிப் போனான். 😀 அப்போது திடீரென யாரோ கதவைத் தட்டும் சத்தம். சிவ பூஜையில் ஏதோ கரடி வந்திருக்கிறது" 😀 என்று நினைத்தான் சிண்ட்ரெல்லன். ஆனால் சத்தத்தோடு சேர்ந்து ஒரு பக்கா சென்னை பாஷை பெண் குரல். "சார், மணி பத்தாச்சி வூட்ல தான் இருக்கியா? அம்மா ஊருக்கு போய்டா நீ எங்க இருக்கேனே தெரிய மாட்டீங்கிது". அவன் கண் விழித்தான். அப்போது தான் புரிந்தது அனைத்தும் கனவு என்று. 😀 வெளியில் பணிப்பெண், "நிக்கட்டுமா, போகட்டுமா" என்று கூச்சல் போடுகிறாள்.

25 வருட திருமண வாழக்கையில் பல முறை சண்டை போட்டு பல முறை கோபித்துக் கொண்டு தன் அம்மா வீட்டிற்கு சென்றது போல் கோபித்துக் கொண்டு அம்மா வீட்டிற்கு போன தன் மனைவியின் ஞாபகமும் நாம் வீட்டில் தனியாக இருக்கிறோம் என்ற சுய நினைவும் வந்தது.

கட்டிலில் இருந்து அவசரமாக எழுந்து லுங்கியை சரியாக கட்டி வாசல் கதவை திறக்க நடந்தான். கதவை திறந்து விட்டதும் பணிப் பெண் உள்ளே வந்தாள். "என்ன சார் அம்மா கோயிச்சிட்டு போய் இன்றும் திரும்ப வரலியா?", என்று கேட்டாள். பின்னர் *shoe rack* திறந்து தன் செருப்பை வைக்கப் போன போது உள்ளே இருந்த அந்த ஒத்த செருப்பை பார்த்து "என்ன சார் அம்மா கோவத்துல எல்லா செருப்பையும் எடுத்துட்டு அவசரத்துல இந்த ஒத்த செருப்ப மட்டும் எடுத்து அதோட ஜோடி செருப்ப இங்க மறந்து வுட்டுட்டு போய்டுச்சா"? என்றாள்.

அவன் அதற்கு "இப்பல்லாம் அவ கோவிச்சிட்டு அவங்க அம்மா வீட்டுக்குப் போனா கூட உஷாரா ஒரு மாதத்துக்கு தேவையான டிரஸ், நகை, மேட்சிங் செருப்பு எல்லாத்தையும் எடுத்துட்டு போய்ரா. ஒரு வேளை அவ பிரண்ட்ஸ் கூட வெளில போனா இல்ல ஏதாவது *function*
வந்தா அப்படியே அவங்க அம்மா வீட்டில இருந்தே ஜம்முனு போயுடுவா" என்றான். "நான் தான் இங்க கவலையா இருக்கேன்" என்றான்.

அதைக் கேட்ட பணிப்பெண், "ஆமா சார், உன்ன பாத்தாலும் பாவமா இருக்கு. அம்மா கூட ஏங்கிட்ட சொல்லிருக்கு இந்த ஒத்த செருப்புல தான் உங்க லவ்வே ஆரம்பிச்சதுனு, இப்படி லவ் பண்ணி கலயாணமாகி ஏய்யா சண்ட போடுறீங்க? உம்மேல உசுரயே வச்சிருக்கு. இல்லாக்காட்டி 25 வருச பழைய செருப்ப இப்படி புதுசு மாதிரி பளபளனு பத்திரமா வச்சிருக்குமா? இந்த ஒத்த செருப்ப கொண்டு போயி சும்மா ரொமாண்சா பேசி அம்மாவ வூட்டுக்கு இட்டுகினு வாயா" என்றாள்.

இதைக் கேட்ட அவன் 25 வருடம் பின்னோக்கிப் போனான். ஒரு தை மாத முதல் வெள்ளிக்கிழமையன்று கூட்டமான ஒரு கோயில் வாசலில் சாமி கும்பிட்டு விட்டு வெளியில் வந்த போது அவன் கழட்டி வைத்த *male* 😀 செருப்புக்கு மேல் ஒரு அழகான லேடிஸ் ஒற்றை செருப்பு மட்டும் கிடந்தது. இது யாரோ ஒரு குழந்தை விளையாட்டாக செய்திருக்கலாம் என்று நினைத்து செருப்பை தொலைத்தவள் பாவமே என்று நினைத்தான். அப்போது அதன் ஜோடி செருப்பை அவன் தேட நினைத்த போது கோயில் வாசலுக்கு வலது புறம் *half saree* அணிந்த ஒரு அழகிய பெண் கையில் பூக்கூடையுடன் கூந்தல் காற்றில் பறக்க ஒரு காலில் மட்டும் செருப்பு போட்டு மறு காலின் நுனி பெரு விரலை அந்த ஈரமான கோயில் ரோட்டில் ஊன்றி

தன் உடலை பேலன்ஸ் இல்லாமல் பேலன்ஸ் செய்து கொண்டு முகத்தில் ஏக கவலையுடன் குனிந்த தலை நிமிராமல் 😀 சுற்றி இருக்கும் சுமார் *300* ஜோடி செருப்பு குவியலில் நம் செருப்பை எப்படி கண்டு பிடிப்பது என்று கலங்கி நின்றதை பார்த்தான். ஆபத்துக்கு பாவம் இல்லை என்று அவனாகவே அந்த ஒற்றை செருப்பை அவள் அருகில் கொண்டு போய் அவள் முகம் பார்க்காமல் உடனே கீழே குனிந்து அவள் கால் பெருவிரலால் கோலம் போட்டுக் கொண்டிருந்த அவள் பாதத்தின் அருகில் வைக்க அவள் குரலில் நன்றியுடன் கலந்த ஒரு சினேகித *thanks* என்ற முதல் வார்த்தையை உதிர்த்து செருப்பை போட்டுக் கொண்டாள். பின்னர் இரு கண்களும் மௌனமாக பேசியது. 😀

உங்கள் பெயர் என்ன என்று கேட்டான். அவள் “சிண்ட்ரெல்லா” என்றாள். 😀

இடைவேளைக்குப் பின் தொடரும். 😀

... Tokyo Pongal break 😀 சீக்கிரம் பந்திக்கு போங்க பொங்கல் தீர்ந்து போயிட்டுருக்கு. 😀

சிண்ட்ரெல்லன் 😀 *.. after interval* 😀

- Sukila (my pen name)

அதற்கு அவன் அந்த ஒற்றை *missing* செருப்பை நினைத்து சிரித்து அவளையும் சிரிக்க வைக்க “உங்கள் பெயர் சிண்ட்ரெல்லா ஆனால் என் பெயர் *prince charming* அல்ல” என்று சொல்லி தன் பெயர் “*P. Charu*” என்றான். உடனே அவள் கோயில் வாசலில் சில்லரை சிதறியது போல் சிரித்தாள். இருவருக்கும் காதல் மலர்ந்து திருமணத்தில் முடிந்தது. அவனுக்கும் ஒரு அழகிய சிண்ட்ரெல்லா கிடைத்துவிட்டாள், அதே காலணி ராசியால். 😀

காலேஜ் பெண்கள் வம்பிழுக்கும் ஆண்களிடம் ஒற்றை செருப்பை தூக்கி “செருப்பு பிஞ்சிடும்” என்று சொல்வது கூட இந்த ஒற்றை செருப்பு சிண்ட்ரெல்லா காலத்து தோஷமாக இருக்கலாம். 😀 இப்போது புரிகிறது ஏன் அக்காலத்து சிண்ட்ரெல்லா இரண்டு செருப்பையும் விட்டுச் செல்லாமல் ஒரு செருப்பை மட்டும் தன்னோடு எடுத்துச் சென்றாள் என்று? ஆயுத பூஜையன்று தன் *safety* ஆயுதமாக பூஜை செய்ய உதவும் என்று நினைத்திருக்கலாம். 😀

இப்போது மீண்டும் அவன் சுய நினைவுக்கு வந்து நாம் தேவையில்லாமல் நேற்று மனைவியிடம் வாக்குவாதம் செய்திருக்கக் கூடாதோ என்று நினைத்தான். மறு நாள் பணிப்பெண் சொன்னதைப் போல் அவர்களை ஒன்று சேர்த்த அதே ஒற்றை செருப்புடன் மனைவியை சமாதானப்படுத்தி வீட்டிற்கு கூட்டி வர அவன் மாமனார் வீட்டிற்கு போனான்.

மாமனார் வீட்டில் எப்போதும் போல் அவனை உபசரித்து தன் மகள் மாடியில் இருப்பதாக மாமியார் சொன்னார். அவன் படியேறி மாடிக்கு சென்று அவன் மனைவி இருந்த ரூமுக்குள் நுழைந்து அவளை சமாதனப்படுத்த “*sorry ma,* நான் உன்ன அப்படி

பேசியிருக்க கூடாது" என்று மெதுவாக ஆரம்பித்தான். பின்னர் அவன் கொண்டு வந்த அந்த ஒற்றை செருப்பை வெளியில் எடுத்து "இதை மறந்து விட்டு விட்டு வந்து விட்டாய்" என்றான். பின்னர் "இந்த செருப்பும் நம் முதல் சந்திப்பும் உனக்கு ஞாபகம் இருக்கிறதா" என்று சென்டிமென்ட் ரூட்டில் சமாதானம் பேசினான்.

அதை கேட்ட வினாடி அவன் மனைவி சிண்ட்ரெல்லா விம்மி வெடித்து "சாமி, நீ இப்படி ஒரு பொறுப்பில்லாத கோபக்காரன்னு தெரிஞ்சிருந்தா அன்னிக்கு நான் வெறும் கால்லயே கோயிலுக்கு வந்திருப்பேன். 😀 " என்று சொல்லி மேலும் "உன் கூட இந்த 25 வருஷம் குப்பை கொட்டினது போதும், வெளியில கிடக்கிற நான் கொண்டு வந்த அந்த ஒத்த செருப்பையும் நீயே வச்சிக்க சாமி, ஆள விடு" என்றாள் மண வாழ்க்கை கசந்த சிண்ட்ரெல்லா.

"வேண்டுமானால் அடுத்த ஜென்மத்தில் நீ சிண்ட்ரெல்லனாக பிறந்தால் நீ விட்டுச் சென்ற செருப்பை வைத்து உன்னை தேடி வந்து மணமுடித்து என்னை வீட்டில் வைத்து இந்த ஜென்மத்தில் நீ டார்ச்சர் செய்ததை போலவே உன்னையும் வீட்டு வேலை மட்டும் செய்ய வைத்து நான் ஆபிஸ் போய் வந்து கோபப்பட்டு பந்தாவிட்டு விரட்டி அந்த வாழ்க்கை எப்படி இருக்கும் என்று உனக்கு புரியவைக்கறேன்" என்றாள், ஒரே மூச்சுல் விஜயகாந்த் கோர்ட்டில் பேசும் டயலாக் போல. 😀

Mr. P. Charu மனதிற்குள் நாம் கனவு கண்ட அதே கனவை இவளும் கண்டிருப்பாளோ? நல்ல வேலை நம் மறு ஜென்மம் சிண்ட்ரெல்லனுக்கு நம் கனவில் மட்டுமே திருமணம் ஆனது என்று நினைத்து சிரித்தான். 😀 இவன் எதற்கு சிரிக்கிறான் என்று தெரியாமல் மேலும் கோபமாக விட்ட இடத்திலிருந்து திட்ட ஆரம்பம்பித்தாள் சிண்ட்ரெல்லா. 😀

மாடியில் ரோமா(Rome) நகரம் மகளின் கோபத்தீயில் பற்றி எரிய கீழேயிருந்து அவன் மாமனார் மேலே என்ன நடக்கிறது என்று தெரியாமல், "தினமும் யாராவது வீட்டில் காலிங் பெல் அடித்தால், அப்பா அவர் வந்திருக்கிறாரா? என்று கேட்பாயே, இப்ப மாப்பிளையே உன்ன தேடி வந்துட்டார், உனக்கு சந்தோசம் தான?, மாப்பிள்ளைக்கும் உனக்கும் இன்னிக்கு நைட் *train*ல இரண்டு டிக்கட் *already book* பண்ணீட்டேன்" என்றார். பின்னர் கீழே அவருக்கே கேட்காத ரகசிய குரலில் அருகில் இருந்த தன் மனைவியிடம், "இவள இப்படி கிளப்பல சாமானியத்தில போகமாட்டா, வருஷத்தில பாதி நாள் மாப்பிள்ள கிட்ட கோபிச்சுகிட்டு இங்க தான் ஒரு வேலையும் பார்க்காம மாடில ஜாலியா இருக்கா" என்றார்.

சிண்ட்ரெல்லா, "நான் பிறந்த இடமும் சரியில்ல புகுந்த இடமும் சரியில்லை, என்ன புரிஞ்சிக்க யாருமே இல்ல" என்ற வழக்கமான புலம்பலுடன் பெட்டியை பேக் பண்ண தயாரானாள்.

சுபம்.

காதல் ஜோடியையும், ஜோடி செருப்பையும் சேர்த்து வைத்துவிட்டோம். 😀 ❤️

காபி-யங்கள்

சுகிலா

☕ கண்டதும் காபி ☕

கண்டதும் காதலா, காபியா என்று கேட்டால் *sorry* காபி *first* காதல் *next* 😀 காதல் இல்லாமல் இருந்து விடலாம் *but* காபி இல்லாமல் வாழ்க்கை கசந்துவிடும். 😀 காதலி சூடாக இருந்தால் கூட சேர்ந்து ஒரு கப் காபி குடித்து அவள் சூட்டை குறைத்து விட்டால் பழைய காதலி கிடைத்து விடுவாள் ஆனால் காபி சூடு ஆறிவிட்டால் எவ்வளவு சூடு ஏற்றினாலும் என் பழைய ஒரிஜினல்(*love at first heat* 😀) காபி கிடைக்காமல் காபியுடன் கொண்ட என் காதலும் கசந்து போகும். காலையும் காபியே, மாலையும் காபியே, நாளையும் காபியே, என் உள்ளம் கவர்ந்த கள்ளி காபி ❤️ ☕ 😀

இன்று மட்டும் மூச்சு விடாமல் இருக்க முடியுமா என்று கேட்டால், முயன்று பார்ப்பேன். ஆனால் இன்று மட்டும் காபியில்லாமல் இருக்க முடியுமா என்று கேட்டால், மூச்சு நின்றுவிடும் 😀

☕ காப்பியின் குல சாமி ஆடு 😀 ☕

கிழக்காப்பிரிக்காவில் எத்தியோப்பியா என்ற நாட்டில் கால்டி(*Kaldi*) என்ற ஆடு மேய்க்கும் சிறுவன் ஒரு நாள் அவனுடைய ஆடுகள் மரத்திலிருந்த ஒரு வகையான பெர்ரி(*berries*) பழங்களை தின்றதும் ஆடுகள் மிகவும் ஊக்கம் பெற்று இரவில் தூங்காமல் இருந்ததை கவனித்துள்ளான்இதை சிறுவன் கால்டி அந்த ஊரில் உள்ள துறவிகளின் தலைவரிடம்(*abbot: head of monks*), “சாமி என் ஆடு ஏதோ சாப்பிட கூடாத பழத்தை தின்று தெய்வ குத்தம் 😀 நடந்திருச்சி சாமி, ஆடு ராத்திரியிலும் தூங்காம ஒரு வடியா உற்சாகமா 😀 இருக்கு சாமி” என்று புகார் அளித்தான்.

அதைக் கேட்ட துறவி தன் *mind voice*ல், “கடவுள் பழத்தை சாப்பிடாதே என்று சொல்லியும் பழத்தை தின்று துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று தேடிய இந்த உலகின் முதல் மனித பஞ்சாயத்தே 😀 இன்னும் தீர்ந்த பாடில்லை இதில் இவன் ஆடு வேர இப்போது பழத்தை தின்று புதுப் பிரச்சனையை கொண்டு வருகிறதே” என்று நினைத்தார்.

பின்னர் அந்தத் துறவி இந்தப் புகாரை தன் கையில் எடுத்துக் கொண்டு அந்தச் சிறுவன் கால்டி சொன்ன அந்த பழத்தை ஆராய அந்த பழத்தை வைத்து பானம் செய்து அதை தான் குடித்து தன் அன்றாடைய இரவு பூஜையில் அமர்ந்தார். அப்போது அவரும் தன் நீண்ட நேர முழு நீள பூஜையின் போதும் தன் சிந்தனை தெளிவாக இருந்ததை உணர்ந்தார். இந்த ஊட்டசக்தி பழத்தை பற்றி தன் மற்ற துறவிகளிடமும் பகிர்ந்து அதன் பிறகு அதன் சிறப்பு உலகமெங்கும் படிப்படியாக பரவியது. அதன் பெயர் தான் “காபி” 😀 காபி பெர்ரியை படைத்த ஆண்டவன் அதை நம் உலகத்துக்கு அறிமுகப்படுத்தவே ஆடு அவதாரம் எடுத்து அதன் பயனை சிறுவன் கால்டிக்கு உணர்த்தி காபியின் புகழை பரவச் செய்ததால் காபியின் குல சாமி, “ஆடு”

☕ *dedicated to all coffee lovers* ❤️

☕ க கா கவிதை 😀 ☕ @ Starbucks cafe 😀

காகித கப்பில் காபி கொடுத்தாள்
காபியை திருப்பி கொடுத்தேன்
காகித கப்பில் குடித்தால் அது
காபியல்ல என்றேன்,
சிரித்தாள்
காபியை மக் கப்பில் மாற்றினாள்
காபி என்றாள்,
சிரித்தேன்
காபியுடன் கவிதை எழுதினேன்
காபி கசப்பில் கவிதை இனித்தது
காக்கைக்கு தன் குஞ்சு போல்
கழுதையாவே இருந்தாலும் இது
கவிதை தான் எனக்கு 😀

மௌனத்தின் குரல்கள்

கோ. கேசவ்கிருஷ்ணா

அவை உள்ளம் என்னும் பெரும் நிலத்தில்
நெடிந்து உயர்ந்த பனை மரங்கள்;
அவை வானம் என்னும் பெரும் கடலில்
விளைந்து தவழ்ந்து இருக்கும் சிறு முகில்கள்;
அவை அமைதி என்னும் தொன் மரத்தின்
ஆழம் கண்ட பெரும் வேர்கள்;
அவை பேசாமல் பேசுகின்ற - சிறுஞ்ச்
செவிகளால் கேட்க முடிய பெரும் வார்த்தைகள்!

மௌனத்தின் குரல்கள்

உள்ளம் என்னும் பெரும் கடலில்
சீரும் சுறாகளும் அவைகள் தான்;
வாழ்க்கை என்னும் பெரும் களத்தில்
வீழ்ந்துடா ஆயுதங்களும் அவைகள் தான்;
இன்னல்கள் நீக்குகின்ற நற் குரலில்
இறைவனின் வாய்மொழிகள் மௌனம்தான்;
இனிய பச்சை நிற பசுங் குரலில்
இயற்கையின் மனம் கொடுப்பது மௌனம்தான்;
பண்ணவன் பரிவு கண்ட இக் குரல்கள்
படயோன் அஞ்சி நடுங்கும் பெரும் மௌனம்;
ஐம்புலனில் இருந்திடதா பெரும் உணர்ச்சி
ஐம்பொறிகள் உணர்த்துகின்ற சிறு மௌனம்!!

மௌனத்தின் குரல்கள்
உள்ளம் உறங்கும் பொழுது இருப்பவையே
பெரும் போரின் போது இருப்பதில்லை;
அங்கும் இங்கும் எங்கும் எதிலும் இரு
மனிதன் தேடும் பொழுது இருப்பதில்லை;
வானம் பூமி பார்த்து இருப்பதுண்டு

என்றும் கீழ்நோக்கி வருவதில்லை
வாழ்க்கை என்பதில் நஷ்டம் இருப்பதுண்டு
அதில் மௌனம் என்றும் சாவதில்லை!!

மௌனத்தின் குரல்கள்

அவை அடக்க முடியா உணர்ச்சிகளின்
சின்னஞ்சிறு குரலில் தோன்றும் பெரும் வார்த்தை;
சிறிது கற்கள் போல் மூழ்கிடுமே சிறிது
தாமரை போல் மிதந்திடுமே;
காற்றில் மிதந்திடா மொழிகள் இவை
மனதின் நிரந்தரமான எழுத்து இவை;
மாண்டோர்கள் கண் கண்ட சிறந்த குரல்
பின் தொடர முடியாத மௌனத்தின் குரல்கள்!!

கேசவ்கிருஷ்ணா, தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில் பிறந்தவர். இளம் வயதில் இருந்து இவருக்கு தமிழ் மீது ஒரு தனிப் பற்று. கவிதை எழுதுவதில் மிகுந்த நாட்டம் கொண்டவர், பல்வேறு போட்டிகளில் கலந்து பரிசுகளும் வென்றுள்ளார். தனது கல்லூரி காலங்களில் "நித்திலம்" என்னும் தமிழ் ஆராய்ச்சி மையத்திற்கு தலைமை வகுத்தது குறிப்பிடத்தக்கது.

Heartiest Greetings from

NIA

The New India Assurance Co. Ltd.

Japan Regional Office: 22F, STEC Joho Bldg.
1-24-1, Nishi-Shinjuku, Shinjuku-Ku TOKYO 160-0023

100th ANNIVERSARY

OUR PRODUCTS

- Fire Insurance
- Householders Insurance
- Shopkeepers Insurance
- Earthquake Insurance
- Automobile Insurance
- Movable All Risks Insurance
- Personal Accident Insurance
- Overseas Travel PA Insurance
- Liability Insurance
- Marine Cargo

NEW INDIA ASSURANCE

AN INDIAN MULTI-NATIONAL SINCE 1920 WITH PRESENCE IN 28 COUNTRIES
YOUR RELIABLE INSURER IN JAPAN FROM 1950
ENSURES LASTING CUSTOMER RELATIONSHIP

RESOURCE PERSONS FOR RELATIONSHIP

Mr. K. K Sunil Kumar	Mr. P. S Amos Victor
CEO, Japan Operations	Dy. CEO, Japan Operations
080-7745-4822	080-8191-6899

Branches: Tokyo, Osaka, Nagoya, Hiroshima, Sapporo, Okayama, Gifu
Sub Branches: Fukuyama, Iwakuni, Shiimonoseki, Himeji
Please visit us at www.newindia.co.jp

அர்விந்த் பாரதியின் தூரிகை

09.12.23- துபாயில் நடந்த பொன்மாலைப்பொழுது இயலிசைக் கொண்டாட்ட நிகழ்வில் இவர் வரைந்த, “இந்திய பண்பாட்டு பிரதிபலிப்பு” *“Glimpses of Indian culture”* கேன்வாஸ் ஓவியம், இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் வழங்கப்பட்டு, தற்போது ஐக்கிய அரபு அமீரகத்தின் - இந்தியத் தூதரகம் அபுதாபியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அவரின் சில ஓவியங்கள் இங்கே ‘.





S.அர்விந்த் பாரதி: துபாய் மணிப்பால் பல்கலைக்கழகத்தில், ஊடகவியல் முதுநிலைப் பட்டம் படிக்கும் இருபது வயது மாணவர். ஆறு வயது முதல் மேடைகளில் பலகுரல், நாடகங்களில் நடிப்பு, ஓவியம் என கலையார்வம். குறுநாடக குறும்பட இயக்கம். எழுத்து, சமூக ஊடகப் பங்களிப்பு என இயங்கிக் கொண்டிருக்கும் இளைஞர். பொன்மாலைப் பொழுது, டோக்கியோ தமிழ்ச்சங்கம், குறுநாடக அமைப்புகளில் அரவணைப்பில் தவழ்ந்து வளர்ந்தவர். சசிகுமார்- மீனாகுமாரி தம்பதியின் மகன். கலை, ஊடகம், நிகழ்த்துக் கலைகளின் வழியே தொடரும் பயணம்.

ஜென்னி-சேப்பியன்ஸ்

பா.பாரத்

காலம் 2100-ம் ஆண்டு, இந்தியாவின் ஒரு கிராமத்தில் இருந்து, வர்ஷினி தன்னுடைய முடியை சரிசெய்து கிளம்பி கொண்டிருந்தாள், கதவின் அருகே செல்ல ஏதோ ஞாபகம் வந்தது வேகவேகமாக தேட தொடங்கினாள்.

வீடு என்பதை விட ஒரு அறை என்று தான் கூற வேண்டும், ஒற்றை கண்டெய்னரை அவள் தனது வீடாக மாற்றியிருந்தாள். எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல் கழிவுகளின் இடையில் இருந்து முதுகில் போடும் பையினை எடுத்தாள், கதவின் அருகில் மீண்டும் செல்லும்போது அந்த அறையின் மூன்று விளக்குகளும் விட்டு,விட்டு எறிந்தன. கண்கள் விரிய புன்னகையுடன் எதிர்பார்த்தது நடந்தது போல அந்த அறையின் இடது பக்கத்தினை பார்த்து திரும்பினாள், அவள் தயார் செய்து கொண்டிருந்த பெண் எந்திரம்(ரோபோட்) எழுந்து அமர்ந்திருந்தது.

"ஜென்னி" என்றபடி ஓடிச்சென்று அதை கட்டிகொண்டாள். ஜென்னியும் கட்டி கொண்டது. பலமுறை செய்த முயற்சிக்கு பின் கிடைத்த வெற்றி ஜென்னி, வன்ஷினிக்கு அவள் தாயாகி போனது போன்ற உணர்வு புல்லரிக்க, கண்ணீரால் அந்த புற்களை நனைத்து கொண்டிருந்தாள். ஒவ்வொரு முறையும் உயிர் பெற்றோம் என்று எழுந்து எழுந்து வர்ஷினி முகத்தினை பார்த்து பின் தோற்ற ஜென்னிக்கு இப்பொழுது பிறந்தது போன்ற உணர்வு மேலேறியது, தன் தாயையே கட்டி கொண்டது. இருவரும் அன்பிற்குள் அடைபட்டு நின்றனர்.

வர்ஷினி கைக்கடிகாரம் எச்சரிக்கை தர "வா,வா" என்றபடி ஜென்னி கையை பிடித்து இழுத்தபடி சென்றாள் வர்ஷினி.கதவின் அருகே இருந்த சிகப்பு துணியால் ஜென்னி முகம் தெரியாதவாறு மூடி விட்டாள். ஜென்னி ஆணா? பெண்ணா? என தெரியாதவாறு அதன் கவச உடை அமைக்கப்பட்டிருந்தது. பருவநிலை மாற்றங்கள் மாறி, மாறி வந்ததால் மதியம் 2 மணிக்கே அன்று இருட்டி விட்டது. தெருவெங்கும் பளீர் என விளக்குகள் வெள்ளை பல் இளித்தன. ஜென்னியால் வர்ஷினி வேகத்தின் அர்த்தத்தை புரிய முடியவில்லை, ஜென்னி நின்றது, காற்று பலமாக வீச மணல் துகள்கள் அவர்கள் முகங்களை முத்தமிட்டு கடந்தது, அர்த்தம் புரிந்தவளாய் " நியாய விலை நிலையம்" போகின்றோம் என்றாள் வர்ஷினி.

ஜென்னியின் செயற்கை நுண்ணறிவு. "இந்த தெருவின் வழியாக சென்றால், மூன்று நிமிடம் தான்" என அவளின் வலது புறம் இருந்த தெருவினை கைகாட்டியது. "எனக்கு தெரியும், நீ நிக்காமல் வா என்றபடி அவளை இழுத்து கொண்டு சென்றாள் வர்ஷினி. சூரிய ஒளி மின்சார சுடுகாட்டின் அருகில் இருந்த ஒத்தையடி பாதையின் பக்கமாக சென்று நியாய விலை நிலையத்தை இருபது நிமிடத்தில் இருவரும் அடைந்தனர். அவ்வளவு கூட்டம் அங்கு. காரணம், இன்றுடன் இலவசங்களை நிறுத்துவதாக அரசாங்கம் அறிவித்திருந்தது. அந்த கூட்டத்திலும் போட்டிருந்த துணியை விலக்காமல் போராடி பசி அடக்கும் மாத்திரை, தூய தண்ணீர் பாட்டில், முகக்கவசம் என இன்னும் மற்றவற்றை வாங்கி கொண்டு வந்தாள் வர்ஷினி, ஜென்னி அங்கிருந்த கண்டெய்னர் வீடுகள், இடிந்தும், இடியாமலும் இருக்கும் வீடுகள், வீடுகளின் முன் நிறுத்தப்பட்டிருந்த வித,விதமான வான் ஊர்திகள், சாலை துப்புரவு பணியில் இருந்து வண்டி ஓட்டுனர் வரை இருக்கும் ஆண் எந்திரர்களை அவ்வப்போது பறக்கும் தூசி காற்றின் நடுவே அது கவனித்து கொண்டிருந்தது. வர்ஷினி அவளை இழுத்து கொண்டு வேகவேகமாக கிளம்ப முயன்றாள்.

தென்காசி மாவட்டம் பொடியனூரில் பிறந்த இவர் தற்போது கட்டிட பொறியாளராக சேலம் மாவட்டம் எடப்பாடியில் பணிபுரிந்து வருகிறார். குறும் படங்கள் மற்றும் திரைப்படங்களுக்கும் கதைகள் எழுதியுள்ளார். முன்னதாக "அகாழிகன்" மற்றும் "இரு காதல் பக்கங்கள்" எனும் இரு குறு நாவலினையும், "இவர்களும் வாழ்ந்தார்கள்" என்ற முழு நீள நாவலினையும் எழுதியுள்ளார். "அனைத்து உயிரிகளுக்கும் சம உரிமை, அதுவே உலகம்" என முழங்குபவர். சாகும் வரை கலைஞனாக இருந்து பேனா ஏந்தி, சமூக மாற்றம் செய்வது என்றுமே சந்தோஷம் என்ற துடிப்பு கொண்டவர்.

சுடுகாட்டினை நோக்கி ஐம்பது வயதான முதியவரின் சவ ஊர்வலம் சென்றது. வர்ஷினிக்கு உள்ளுக்குள் அழுகை பொங்கியது, வேறு வழியின்றி தெருக்களின் வழியே நடக்க தொடங்கினாள், காற்றும் பலமாக வீச தொடங்கியது, ஜென்னியின் துணியினை இறுக்கமாக கட்டிவிட்டாள் வர்ஷினி, அதற்குள் அவளின் முகத்தினை மூடி இருந்த துணி காற்றில் பறந்தது, வேகவேகமாக கீழே குனிந்தபடி கண்ணீரை துடைத்தபடி நடந்தாள்,

அந்த தெருவின் வழியே சென்று கொண்டிருந்த ஒவ்வொரு கண்களும் இவளை வித்தியாசமாக பார்க்க தொடங்கியது, அந்த கஃபேயின் வெளிச்சம் வர்ஷினி முகத்தில் பட அழுகை பீறிட்டது, வாயை பொத்திகொண்டு, நீர்வழிய நடந்தாள், அங்கிருந்த சில வாலிபர்கள் இவளை அடையாளம் கண்டனர், "ஏய் மொட்ட ரோசா" என்றனர், சிலர்" டேய் அது "கொட்ட, கொட்ட ரோசா" என சத்தமாக சிரித்தனர். அவர்கள் இருவரையும் பின் தொடர்ந்து கேலிகள் செய்ய தொடங்கினர். ஜென்னி அவர்களை எதுவும் செய்து விட கூடாதென அதன் கையினை இறுக பற்றி இறுகிய இதயத்துடன் நடந்தாள் வர்ஷினி. பின்னால் ஒருவன் " இது யாரு புது ஆளா?" என்றான். அவன் சத்தம் தூரத்தில் இருந்தது இவர்கள் கண்டெய்னருக்குள் இருந்தனர், கதவின் அருகேயே முட்டியிட்டு சத்தமாக கதறி அழுதாள் வர்ஷினி, ஜென்னிக்கு என்ன செய்வது என்பது தெரியவில்லை இறுக அணைத்து கொண்டாள்.

என்னாச்சி என ஜென்னிக்கு கேட்க ஆசை, இந்த நேரத்தில் கேள்விகள் வேண்டாம் ஆறுதலாய் தோள்கள் இருந்தால் போதுமென அவள் செயற்கை நுண்ணறிவு கூறியது. அதற்குள் வர்ஷினி "ஜீன் மாறுபாடு என் தப்பா, திருநங்கைனா தப்புதானா?, பரிணாம வளர்ச்சி அடஞ்ச குரங்கு தான மனுசன், இத ஏன் பரிணாம வளர்ச்சியா பாக்க மாட்றான, வேலையே இல்லாம அலஞ்சேன் அந்த கஃபே-பையன் தான் எனக்கு வேல கொடுத்தான், நாங்க ரெண்டு பேரும் நல்ல நண்பர்கள் தான், கடையும் நல்லா போச்சி நான் சேர்ந்த அப்புறம், நாங்க ரெண்டு பேரும் தப்பா பழகுறோம், எங்க பழக்க, வழக்கத்தால அடுத்த தலைமுறை பாதிக்கும்னு ஏதேதோ காரணம் சொன்னாங்க கடை வளர்ச்சி பிடிக்காதவங்க, அந்த கடைகார பையன் அப்பவும் எனக்கு அவ்ளோ துணையா நட்போட இருந்தான், கடைசியில நா அவன வச்சிருக்கேனு சொல்லி அவன் குடும்பத்த கூட்டி வந்து என்ன அடிச்சி, தகாத வார்த்தையால திட்டி அசிங்கபடுத்துனாங்க, கடவுளே! என் பொறப்புக்கு நா என்ன பண்ணுவேன், இவங்க நாங்க வேலைக்கு போனா அசிங்க படுத்துறாங்க, அடிக்றாங்க, இந்த பொறப்பு எவ்ளோ படிச்சாலும் ரோட்டோரம் நின்னு கைதட்டி காசு வாங்கதானு நினைச்சாங்களா? என ஏங்கினாள்.

ஜென்னி, ஜென்னி பாரு நா யாரும் பன்னாதத பன்னிட்டேன், நீ தான் என் வெற்றி , நீ தான் எங்க அறிவு, மூளை என்னனு காட்ட போற, உன்னால பறக்க முடியும், பறக்ற எந்திரத்த காட்றேன், விஞ்ஞானிங்ற பட்டம் வரட்டும் வர்ஷினிங்ற பெயர் மட்டும்தான் இருக்கும், ஒத்த ரோசா, பொட்ட ரோசா-லா இருக்காது" என அழுகையை துடைத்து ஜென்னி முகத்தினை ஆத்மார்த்தமாய் பார்த்தாள். ஜென்னி" எல்லாமே கண்டிப்பா மாறும், நா இருக்கிறேன்" என கூறி கொண்டிருக்கும் போதே மின்சாரம் தடைபட்டது.

இலவச மின்சாரம் என்பதால் இலவச நிறுத்தத்தின் காரணமாக சாயங்காலம் ஆறு மணியோடு அதுவும் நின்று போனது. வர்ஷினி இருட்டில் ஒருவாரு தேடி வட்டமாய் இருந்த காந்த விளக்கினை எரிய செய்தாள். வெளிச்சத்தில் அப்பொழுதுதான் கவனித்தாள் ஜென்னி கீழே விழுந்து கிடந்தது, அதற்கு தேவையான எரிசக்தி அளவினை வர்ஷினி கவனிக்கவில்லை. ஜென்னி கவலைக்கிடமான நிலையில் படுக்கையில் கிடத்தபட்டது, மற்றவர்கள் வீட்டில் இலவச மின்சாரம் இல்லை. ஆதலால், அவர்கள் வீடுகளில் மின்சாரம் இருந்தது, அவர்களிடம் சென்று கேட்க யோசித்து கொண்டிருந்தாள் வர்ஷினி, இருபது மணி நேரத்திற்குள் ஜென்னிக்கு எரிசக்தி வேண்டும் இல்லை இறப்புதான்,

.

ஜென்னி தொழில்நுட்பம் இயங்காது. வெளியே செல்ல எழுந்தவளின் கையினை பிடித்து அமர செய்தது ஜென்னி, வர்ஷினி கையினை பிடித்தபடி அந்த வெளிர் சிகப்பு நிற ஒளியில் அவள் அன்பினை நேசித்து கொண்டிருந்தது ஜென்னி, "நீ யாரிடமும் உனக்காகவோ, எனக்காகவோ கெஞ்ச வேண்டாம்" என்றபடி வர்ஷினி முகத்தினை அது ஆழ்ந்து பார்த்து கொண்டிருந்தது

நேரங்கள் கடந்து கொண்டிருக்க மௌனங்களை விலக்கி இறக்கும் முன் கேட்பதை போன்று ஜென்னி திக்கி,திக்கி கேட்டது " ஏன் முகத்துல துணிய சுத்தி என்ன வெளிய கூட்டி போன", வர்ஷினிக்கு உடம்பெல்லாம் கூசியது, வாந்தி வருவது போல இருந்தது, ஆன்மாவினை அடக்கி தட்டுத்தடுமாறி தொடங்கினாள்,

" ஆண் எந்திரர்களை எங்கும் காணலாம், எங்கும் ஆண் மயம் தான் பெண் எந்திரங்கள் வீட்டு வேலைகளுக்கும், படுக்கை அறை வேலைகளுக்கும் மட்டுமே பயன்படுத்த படுகின்றன, உன்னை அவர்கள் கண்டால் தூக்கி செல்வார்கள் சபலம் நீக்க உன்னிடம் எதுவும் இல்லை என்றால் தூக்கி எறிவார்கள் என்னை போல" என்றபடி தள்ளி சென்று வாந்தி எடுத்தாள்.

கண்ணீரோடு திரும்பி வந்து பார்க்கையில் ஜென்னி கண்களில் கருப்பு நிற எண்ணெய் வடிந்திருந்தது, ஜென்னி அணைந்திருந்தாள். வர்ஷினி அதன் கைகளை மாரோடு கட்டியபடி கால்,கைகளை மடக்கியபடி அதன் அருகில் படுத்திருந்தாள். சூரியன் உதித்ததும் சூரிய ஒளி மூலம் எரிசக்தி கொடுக்கலாம் என விடியலுக்காக காத்திருந்தாள்.

இலவசம் வேண்டாம், வேண்டாம் னு சொல்வானுங்க அவனுங்ககிட்ட எல்லாமே இருக்கும், இல்லாதவங்க எப்டி வாழ்றதாம். என இருண்ட கண்டெய்னருக்குள் தன் விடியலுக்காக காத்திருந்தாள்..

NEXGEN
ACCELERATING THE CHANGE

WE ARE PROVIDING SMART SOLUTIONS

OUR SERVICES

- SAP Solution and Services
- Web & Mobile Apps Development
- DX Cloud Security Service
- System Operation and Maintenance

WELCOME TO NEX-GEN FAMILY

A next generation IT services company focusing on solving the complex problems of business and common people using the cutting edge technologies and innovative brains. We harness the power of emerging technologies (Cloud, IoT, AI… etc) and highly trained human resources to help our clients adapt to the digital world and make them successful.

Rajeshkumar Sankarlingam
President / CEO

Mohan Govindasamy
Managing Director

Taku Ebuchi
Executive Officer

Headquarters
Tokyo Akihabara

Branch Office
Nagaoka, Niigata Prefecture

Nearshore base ① Tokunoshima, Kagoshima Prefecture

Nearshore base ② Naha City, Okinawa Prefecture

Branch Office - India
Coimbatore & Chennai, TamilNadu

03-3525-8197 | 03-3525-8198
contact@nexgen-global.com
www.nexgen-global.com

Group Company

iTokyo Academy
connecting dreams

Learn Japanese & IT Technology Courses at One place and become a Software Engineers. Systematic Training Approach by Professional Native Trainers at **iTokyo Academy Coimbatore & Erode,** Tamilnadu, India.

+91 99 42 99 39 00 | +91 99 44 39 39 00
info@itokyoacademy.com
www.itokyoacademy.com

வடமொழி கற்கலாமே

கிருத்திகா முரளி மணிகண்டன்

ஜப்பானுக்கு நான் வந்து சுமார் 18 வருஷம் ஆகிறது. இதுல, முதல் 7 வருஷம் டோக்கியோல இருந்தேன். அப்ப வெளிநாட்டுல இருக்கிற நினைப்பே இல்லை. இந்தியால இருக்கிற மாதிரி இருந்தது. எப்பவுமே நம்ம மக்களோட இருந்து பண்டிகை எல்லாம் சந்தோஷமாக கொண்டாடினேன்.

அதன்பிறகு, 11 வருஷமா வகாயாமால இருக்கேன். இங்க இருக்கும்போது தான், இந்த நாட்டு மக்களுடன் பழக வாய்ப்பு கிடைத்தது. அப்ப இந்தநாட்டு மக்கள் தங்கள் மொழிக்கு கொடுக்கும் முக்கியத்துவம், தன் மொழி மீது இருக்கும் பற்று, அதன் தொன்மம் எல்லாம் புரிந்தது.

அப்ப எனக்குள்ளே ஒரு தேடல் ஆரம்பித்தது. அப்ப நம்ம நாட்டுக்கு என்னன்னலாம் இருக்கும்னு. இதே சமயம் தான் இணையதள வளர்ச்சியும் வளர தொடங்கியது. இதைப்பற்றி சிறிது அறிய வாய்ப்பு அமைந்தது. அப்ப நம்ம நாட்டுப் பிரதமரும் கூட அடிக்கடி தமிழைப்பற்றியும் அதன் புராதனம் பற்றியும் அது உலகின் பழமையான மொழி பற்றியும் நிறைய கூறிவந்தார்.

நம்ம பாரத நாட்டில் உள்ள எல்லா மொழிகளுக்கும் தொன்மம் இருக்கும் அல்லவா? எங்கோ யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். நம் பாரத அன்னைக்கு ஸம்ஸ்கிருதமும் தமிழும் இரு கண்களாக விளங்குகிறதுன்னு. இவை நம் பாரத நாட்டின் பௌக்கிஷம். சிறு வயதில் தமிழுன் தொன்மத்தை அதன் சுவையை சிறிது சுவைத்திருக்கிறேன். நான் கற்றதோ சிறிதிலும் சிறிது தான், ஆனாலும் அது நம்மை சிறுவயதில் நெறிப்படுத்துகிறது!

ஔவையாரின் நீதி நூல்கள், இரண்டடியில் எல்லாவற்றையும் உள்ளடக்கும் திருக்குறள், பாரதியாரின் எழுச்சிமிக்க பாடல்கள்!! ஆகா சொல்லிக்கொண்டே போகலாம். எத்தனை வயதானாலும் மனதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

சிறு வயது முதலே சம்ஸ்கிருதம் கற்க ஒரு ஆசை. சந்தர்ப்பம் சரியாக அப்போ அமையவில்லை. இந்த இணையதள வளர்ச்சியில் இது நிறைவேறியது. அதுவும், கோவிட் சமயத்தில், இணையதளம் மூலமாக தேவ பாஷையான சம்ஸ்கிருதத்தை கற்க ஒரு வாய்ப்பு அமைந்தது.

ஸம்ஸ்கிருதம்ன்னா என்ன? ஸம்+கிருதம் - நன்றாக செய்யப்பட்டது. எப்படி நம் தாய் மொழியான தமிழில் உயிர் உள்ளதோ, அப்படி இதிலிலும் உயிர், ஆன்மா உள்ளது. இதை தேவ பாஷைன்னு ஒதுக்கி விட்டுட்டோம் பல காரணங்களினால். ஆங்கிலேய படையெடுப்பு இதை செவ்வன நடத்தியது.

பொதுவா, நம் பாரத நாட்டில் உள்ள மொழிகளில் உள்ள ஒவ்வொரு எழுத்திற்கும் ஒரு பொருள் உண்டு. இதைத்தான் தொல்காப்பியர், “எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே”, என்கிறார். அதுவும் நம் கலாசாரத்தை ஒட்டியே இருக்கும். நாம் அன்றாடம் வாழும் வாழ்க்கையில் இது ஒன்றி உள்ளது. இது தான் இதனுடைய சிறப்பு, அழகு!
முன்காலத்தில் இது ஏட்டில் மட்டுமில்லாமல் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் மொழியாக இருந்தது. இன்றைக்கு இது கர்னாடகா சிமோகா பக்கத்தில் இருக்கும் இரண்டு ஊர்களில் மட்டுமே அலுவல் மொழியாக இருக்கு.

கிருத்திகா முரளி மணிகண்டன் வகயாமாவில் கடந்த பத்து ஆண்டுகளாக வாழ்கிறார். தமிழ் மீதும் இந்திய ஞான மரபின் மீதும் பற்றுக்கொண்டவர்.

இந்த ஸம்ஸ்கிருத மொழி, பாணினியின் இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டது. இதன் எழுத்துக்களின் உச்சாரணம் நம் உடலின் எந்த பாகத்தில் இருந்து வர வேண்டும் என்பது கூட தெளிவாக குறிப்பிட்டிருக்கிறது. வேதங்கள், உபநிஷதங்கள், பிரம்ம சூத்திரம், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம், 18 புராணங்கள், பஞ்சமகாகாவியங்கள், சிற்றிலக்கியங்கள், நாடகம், கணிதம், வானவியல், ஜோதிடம், மருத்துவம், அரசியல்,,, இன்னும் ஏராளமானவை அடங்கும்.

நாம் இந்த உலகத்தில் நிறைவுடன் வாழ்வதற்கும் இவ்வுலகில் உள்ளவைகளை ரசித்து வாழ்வதற்கும் இவைகளெல்லாம் வழிக்காட்டுகிறது. நாம் படிக்கும் பல ஸ்லோகங்களுக்கு அர்த்தம் புரிகிறது. அப்பப்பா! அப்ப நாம சின்ன வயசுக்கே போயிடலாம். மனதிற்கு என்ன ஒரு நிறைவு! காளிதாசர் போன்றோரின் காவியங்களை அவர் இயற்றிய மொழியிலேயே படிக்கும் போது அதன் பொருள் எளிதில் விளங்கும் போது, என்ன ஒரு இன்பம்! ஆகா!! இதை ரசிக்க இந்த ஒரு ஜன்மம் போதுமா?

இப்பேர்ப்பட்ட இந்த மொழியை பேணிக்காப்பது நம் கடமை. இது வெறும் மொழிக்காக மட்டுமில்லை, இது நம் கலாச்சாரத்தோடு இணைந்தது. இதை நாம் செவ்வனே கற்று நம் அடுத்த தலைமுறைக்கு கடத்துவது நம் கடமை! இரு கண்களாக இருக்கும் தமிழ் நமது தாய் மொழியாக இருப்பது நமது பாக்யம், அதை நாம் இயல்பாக கற்க இயலும். மற்றொரு கண்ணாக விளங்கும் ஸம்ஸ்கிருதத்தை கற்று பாரத அன்னைக்கு ஒளி சேர்ப்போம்!!

'தன்னை அறிய தனக்கொரு கேடில்லை 'என்ற திருமூலர் வாக்கு போல் நாம் நம் மூலத்தை கண்டறிவது இன்றியமையாதது. இது நம் தலைமுறையினர் இன்புற்று வாழவழிவகுக்கும்!!

பிழைப்புக்காக அயல் நாட்டு மொழியை கத்துக்கறோம். நம்மள அறிஞ்சுக்க நம் பாரத மொழிய கத்துக்கலாமே.

Resource Development Co., Ltd.
資源開発

204 Judicial Scrivener Joint Office 1-16-5, Chuo, Edogawa-ku, Tokyo 132-0021

toll-free call：0800-805-1404

Name of person-in-Charge：

Drawings

Ananya

Ananya Sri Selvaganesan aged 11 years is currently studying grade 6 in UIA international school. Art is one of her favorite hobbies!

Pongal 2024 was brought to you by the efforts of the following members

Arumugam V

Govindarajan

Gowrishankar

Hari Narayanan

Jeevanandam

Kavitha Sivakumar

Narayana Iyyappan (Prakash)

Natarajan Dhakshinamoorthy

Natarajan Subramaniam

Panneer Selvam

Prem Kumar Prithviraj

Siva Prakash

The Cultural Programmes were coordinated by Mrs. Vineetha Dharmarajan



Please send your comments and feedback on Pongal 2024 Malar to pongaljp@gmail.com.
If you wish to contribute articles for next year's Malar 2025, please send it by email as above.

Acknowledgements & Notes

We wish to thank the contributors of the articles and pictures for their enthusiasm and effort.

Cover Picture:	**Pongal 2024 Backdrop**
Edited by:	**K Govindarajan**
Proofreading Support	**Arumugam V**
Author Coordination	**Gowrishankar**

All articles, pictures and content within this Malar unless stated otherwise, belong to the original authors. Any republication of these without their written consent is prohibited.

WISH YOU ALL A VERY HAPPY

PONGAL

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்வருந்து வானத் தவர்க்கு. - திருக்குறள் (௮௬)

SRI BALAJI
authentic south Indian cuisine

Govindas Res is very happy to be part of

31st Year Pongal Celebrations - Japan

31ஆம் ஆண்டு பொங்கல் விழா - ஜப்பான்

Where Purity is Power

Govinda's

Pure Vegetarian Restaurant

2-23-4 Funabori, Edogawa-ku, Tokyo, Japan

東京都江戸川区船堀2-23-4

TEL/FAX 03-6808-2157

http://www.govindas-tokyo.com/ | @GovindasRestoTokyo